Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

சுடர் : 38
கதிர் : 253

ஞாயிற்றுக்கிழமை 06 ஒகஸ்ட் 2023

ஆடி 21 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



கி.பி. 1ஆம் - 3ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட

## லக்சுமி நாணயங்கள் கந்தரோடையில் மீட்பு!

சர்வதேச ஆராய்ச்சியாளர் முன்னிலையில் நடைபெற்ற அகழ்விலேயே கிடைத்தது

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 6

கந்தரோடையில் விகாரை அமைந்துள்ள பகுதிக்கு அண்மையாக முன்னெடுக்கப்பட்ட தொல்பொருள் அகழ்வின்போது லக்சுமி நாணயங்கள் 5 மீட்கப்பட்டுள்ளன. அவற்றுடன் ரோம நாணயங்களும் சிலவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. »15

## குருந்தூர்மலைக்கு சிங்களச் சாயம்

நூல் வெளியீடு

கொழும்பு, ஓக. 6

சுதந்திர மக்கள் சபையின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமணவால் 'குருந்தி விஹார வம்சய' என்ற பெயரில் »15

புது அரசமைப்பு - தமிழ் அரசு

## '13'

நிராகரிப்பு - முன்னணி

நடைமுறை - கூட்டணி

ஜனாதிபதி செயலகத்துக்கு 3 வேறுபட்ட பரிந்துரைகள்

யாழ்ப்பாணம், ஓக. 6

13ஆவது திருத்தம் தொடர்பில் கட்சித் தலைவர்களிடம் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியின் செயலர் கோரியுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகளிடமிருந்து 3 வேறுபட்ட நிலைப்பாடுகள் முன்வைக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வகட்சிக் கூட்டத்தில் 13 தொடர்பில் ஆராயப்பட்டாலும் இறுதி »15

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

பருத்தித்துறையை மிரட்டிய

## முகமூடிக் கொள்ளைக்கும்பல்; இருவரைப் பிடித்தது பொலிஸ்!

யாழ்ப்பாணம், ஓக. 6

பருத்தித்துறையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். »15

அடாத்தாக மீன்பிடித்த

## சிங்கள மீனவர்களை மடக்கிய மக்கள்

முல்லைத்தீவு, ஓக. 6

தண்ணிமுறிப்புக் குளத்தில் நன்னீர் மீன்பிடிச் சங்கங்களின் மற்றும் அரச அனுமதி இன்றி மீன்பிடியில் ஈடுபட்ட 29 சிங்கள மீனவர்களை மடக்கிப்பிடித்து ஒட்டுசுட்டான் »15

## ரயில் முன் பாய்ந்து குடும்பப்பெண் சாவு!

யாழ்., ஓக. 6

அரியாலையில் இளம் குடும்பப் பெண்ணொருவர் தவறான முடிவெடுத்து ரயில் முன்பாகப் பாய்ந்து உயிரை மாய்த்துள்ளார். புங்கன்குளம் ரயில் நிலையத்தில் நேற்று பி.ப. »15



பறாளாய் முருகன் ஆலயம்

## அரசின் வர்த்தமானிக்கு எதிர்ப்பு: பேரணியாகச் சென்ற மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஓக. 6

பறாளாய் முருகன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள அரச மரமானது சங்கமித்தையால் நட்டப்பட்டதாகக் கூறி - தொல்லியல் சின்னமென வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டமைக்கு »15

## கப் வாகனம் - மோ.சைக்கிள் விபத்து

ஒருவர் உயிரிழப்பு

கிளிநொச்சி, ஓக. 6

கப்ரக வாகனமும் மோட்டார் »14

## விபத்தில் மாணவன் சாவு!

யாழ்., ஓக. 6

ஆனைப்பந்திச் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் யாழ்ப்பாணப் பல் »14


## சங்கமித்தை வரவுமில்லை அரச மரம் நடவுமில்லை

முன்னணியும் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 6

சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்திலுள்ள அரச மரத்தை தொல்பொருள் சின்னமாக அறிவித்து வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு »14

சஞ்சீவி





noolaham.org | aavanaham.org

விபத்துகளைத் தவிர்க்க

# வடக்கு மாகாணத்தில் வீதிப்பாதுகாப்புக் குழு

## வடக்கு ஆளுநர் பரிந்துரை



**யாழ்ப்பாணம், ஓக. 6**

**வடமாகாணத்தில் வீதி விபத்துகள் அதிகரித்து வரும் நிலையில், அவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் துறைசார் அதிகாரிகளை உள்ளடங்கிய வகையில் விரிவான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. வீதிப் பாதுகாப்புக் குழுவொன்றை உருவாக்குவது தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.**

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், மாவட்ட செயலாளர்கள், மருத்துவ அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரிகள், மாநகரசபை ஆணையாளர், வடக்கு மாகாணப் பிரதி பொலிஸ்மா அதிபர் சார்பாக யாழ்ப்பாண மாவட்டப் பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் துறைசார் அதிகாரிகள் ஆகியோரின் நேரடி, இணையவழி பங்குபற்றுதலுடன் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது யாழ்.போதனா மருத்துவமனையின் எலும்பியல் மருத்துவ நிபுணர் கோபிசங்கர், 'மேல் மாகாணத்துக்கு அடுத்தபடியாக அதிக வீதி விபத்துகள் இடம் பெறும் மாகாணமாக வடக்கு மாகாணம் காணப்படுகிறது. போதியளவு வீதிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை, வர்த்தக நிலையங்கள் சந்தைப்படுத்தலுக்காக வீதிகளைப் பயன்படுத்துகின்றமை, முறையற்ற வாகனத்தரிப்பிடங்கள், நடைபாதையற்ற வீதிகள் முதலிய பலவும் இதற்குப் பிரதான காரணமாக இருக்கிறன' என்று சுட்டிக்காட்டினார்.

அதற்கமைய யாழ். நகரப்பகுதியில் வாகனங்களின் நெரிசல்களைக் குறைப்பதற்கு, மருத்துவமனை வீதியைத் தவிர்த்து மாற்றுப் பாதையூடாக பிரதான வீதிப் போக்குவரத்து மார்க்கத்தைப் பயன்படுத்த பேருந்துகளை ஊக்குவித்தல், மருத்துவமனைக்கு வருவோருக்கென குறுகிய போக்குவரத்துச் சேவைகள் ஏற்பாடுகள் செய்தல் ஆகியவை தொடர்பில் ஆலோசிக்கப்பட்டது.

வீதிகளுக்கு நடுவே வாகனத்தரிப்பிடங்கள் இருப்பது மிகவும் பழமையான ஒரு நடைமுறை என்று இங்கு சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், 'இனிவரும் காலங்களில் நிலக்கீழ் வாகனத்தரிப்பிட முறைகளுக்கு நாம் செல்லவேண்டும். வீதிப் போக்குவரத்துச் சட்டங்களை மீறும் செயற்பாடுகள் எங்கே? எப்படி? எப்போது? நடைபெறுகின்றன என்பது தொடர்பில் சரியாக இனங்கண்டு, மேம்படுத்துவதன் மூலம் விபத்துகளைக் குறைக்கலாம். அத்துடன் பாதுகாப்பான போக்குவரத்து வாரம் ஒன்றைக் கடைப்பிடித்து அதில் பொதுமக்களுக்கு விழிப்பூட்டும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும். அதேவேளை நெடுந்தூரப் பயணங்களில் ஈடுபடும் ஓட்டுநர்கள் பல மணி நேரங்கள் கடமையில் ஈடுபடுவதால் ஓய்வெடுத்து புத்துணர்ச்சி பெற விசேட தரிப்பிட வசதியை விரிவாக்கி விரைவில் நடைமுறைப்படுத்துவது நல்லது' என்று சுட்டிக்காட்டினார்.

அத்துடன், துறைசார் அதிகாரிகளின் பங்களிப்பில் வீதிப்பாதுகாப்புத் தொடர்பான குழுவை உருவாக்கி அதன் மூலம் விபத்துகளைக் குறைக்க நடவடிக்கை எடுப்போம் என்றும் ஆளுநர் அறிவுறுத்தினார். (ச-26.27)

# வளர்ப்பு மாடுகள் களவாடல் சந்தேகநபர்களுக்கு மறியல்!



யாழ்ப்பாணம், ஓக. 6

களவாடிய மாடுகளை இறைச்சிக்காக வெளியிடங்களுக்குச் சட்டவிரோதமாகக் கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரண்டு இளைஞர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

வட்டுக்கோட்டை, சங்கரத்தை மற்றும் மானிப்பாய் பகுதிகளில் அண்மையில் மாடுகள் களவாடப்பட்டன. அவை நவாலி வழுக்கையாற்று மயானப் பகுதியின் பின்புறமாக கட்டிவைத்து பட்டாரக வாகனத்தில் கடத்தப்படுவதாகப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் களவாடப்பட்ட மாடுகளையும் பட்டாரக வாகனத்தையும் கைப்பற்றியதுடன் மாடுகளைக் களவாடிய குற்றச்சாட்டில் இரண்டு இளைஞர்களையும் கைது செய்தனர்.

சந்தேகநபர்கள் இருவரையும் பொலிஸார் நேற்றுமுன்தினம் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேகநபர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் மாடுகளை உரிமையாளர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டது. (ச-125)

# தென்கயிலை ஆதீன சிவ சங்கமம் நிகழ்வு


கொழும்பு, ஓக. 6

தவத்திரு அகத்தியர் அடிகளார் தென்கயிலை ஆதீனத்தின் மணிவிழாவையொட்டி சிவ சங்கமம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திருகோணமலை தென்கயிலை ஆதீனத்தில் இடம் பெறவுள்ளது. '60 ஆவது அகவையில் அடிகளாரின் ஆன்மீக சிவவாழ்வின் பதிவுகள்' எனும் தொனிப்பொருளில் வடக்கு - கிழக்கின் சைவ அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச-ரி3-125)

# முல்லை ஒட்டன்குளத்தில் உயிரிழந்த யானை மீட்பு!

முல்லைத்தீவு, மாந்தை ஒட்டன்குளம், விநாயகபுரம், மனமஞ்சான் பகுதியில் இறந்த நிலையில் யானை ஒன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது. வயலுக்குச் சென்ற விவசாயிகள் குறித்த யானை தொடர்பில் வழங்கிய தகவலையடுத்து வன உயிரிகள் திணைக்களத்தினர் அந்த இடத்துக்கு விரைந்தனர்.

அங்கு யானையை பரிசோதித்த வனஜீவராசிகள் திணைக்களத்தினர், யானையின் பின்னங்காலில் கண்ணிவெடித் தாக்குதலில் சிக்குண்டு ஏற்பட்ட காயம் காணப்படுகிறது. யானையின் உடற்கூற்றுப் பரிசோதனைகள் இன்று இடம்பெறும் என்று தெரிவித்தனர். (ச-19)



# பழுதடைந்த மாட்டிறைச்சி: சந்தேகநபரொருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 6

பாவனைக்கு உதவாத நிலையில் ஐந்தரைக் கிலோ மாட்டிறைச்சியை உடைமையில் வைத்திருந்தவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளாரென ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறை, மண்கும்பான் பகுதியில் வைத்து சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபருக்கெதிராக வழக்குப் பதிவுசெய்து நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

# போதைப்பொருளுடன் இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 6

யாழ்ப்பாணம், குருநகரில் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸாருக்குக்கிடைத்த புலனாய்வுத்தகவலுக்கு அமைய இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபர்களிடமிருந்து 80 மில்லிகிராம் ஹெரொய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டது. சந்தேகநபர்களுக்கெதிராக சட்டநடவடிக்கை எடுப்பதற்கு மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ரி-125)

# சாராயம் விற்பனை சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 6

அனுமதிப்பத்திரமின்றி சாராயத்தை விற்பனை செய்தகுற்றச்சாட்டில் ஊர்காவற்றுறை பொலிஸாரால் நேற்று ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை - புளியங்கூடல் பகுதியில் சட்டவிரோதமாக சாராயம் விற்பனை செய்யப்படுவதாக வழங்கப்பட்ட தகவலுக்கமைய இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபரிடமிருந்து ஆயிரத்து 875 மில்லி லீற்றர் சாராயத்தை பொலிஸார் கைப்பற்றினர். சந்தேகநபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-125)

# வரணியில் விபத்து இருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஓக. 6

தென்மராட்சி, வரணி - கறுக்காய் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் வயோதிபர் உட்பட இருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வரணி வடக்கு ,கறுக்காய் சைவப்பிரகாச வித்தியாலயத்துக்கு அருகே நேற்றுச் சனிக்கிழமை காலை இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியின் ஓரமாக நடந்து சென்ற வயோதிபரை மோதித்தள்ளி விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் வயோதிபரும் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோப்பாயில் நாளை உணவுத் திருவிழா!

யாழ்ப்பாணம், ஓக. 6

கோப்பாய் பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவினர் நடத்தும் உணவுத் திருவிழா நாளை திங்கட்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 3 மணி வரை கோப்பாய் பிரதேச செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பாரம்பரிய மற்றும் இயற்கை முறையிலான சைவ, அசைவ உணவுகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. எனவே, அனைவரையும் உணவுத் திருவிழாவில் கலந்து சிறப்பிக்குமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம -66)

### தேர்தல் ஆதாயத்துக்காக

# தமிழக - ஈழ மீனவர்களை மோதவிடும் அண்ணாமலை

### *யாழ்ப்பாண மீனவ சமாசம் கண்டனம்*

**யாழ்ப்பாணம், ஓக. 6**

**தமிழக மீனவ மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக பா.ஜ.க. தமிழ்நாட்டுத் தலைவர் அண்ணாமலை இரட்டைவேடமிட்டு தமிழக மீனவர்களை உசுப்பேத்துதல் கீழ்த்தரமான செயற்பாடேயாகும் என யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசம் கண்டித்துள்ளது.**

யாழ்ப்பாணத்தில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்கள் இணைந்து நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

மேலும் கூறியதாவது:-

அத்துமீறிய இந்திய ரோலர் படகுகளின் ஆதிக்கத்தால் வடக்கு மீனவர்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்து வருகின்றனர். கடற்றொழில் அமைச்சர் இதுதொடர்பில் பேசாமடைந்தையாகவே செயற்படுகிறார். இந்தநிலையில் பா.ஜ.க. தமிழகத் தலைவர் அண்ணாமலை தமிழ்நாட்டில் தேர்தலுக்காக அவரால் முன்னெடுக்கப்படும் பாத யாத்திரை நிகழ்வில் கச்சதீவை இந்திய மீனவர்களுக்கு மீட்டுத் தருவதற்கு மோடியிடம் பேசுவதாகத் தெரிவித்துள்ளார்.

அவர் யாழ்ப்பாணம் வந்தபோது வடக்கு மக்கள் தொப்புள் கொடி உறவு. அவர்களுக்குப் பாதிக்காத வகையில் இந்திய மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபடுவது தொடர்பில் பேசுவதாகத் தெரிவித்தார். இவ்வாறு இரண்டுவிதமாகப் பேசுகின்ற அண்ணாமலை தேர்தலை இலக்காக வைத்தே மீனவர்களிடையே குழப்பம் விளைவிக்கிறார்.

ஆகவே இந்திய அத்துமீறிய ரோலர் படகுகளைத் தடை செய்வதற்கு யாழ். இந்தியத் துணைத் தூதரகமும் ஜனாதிபதியும் விரைவான நடவடிக்கையை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-27)

## உரத்துடன் கொழும்பை வந்தடைந்தது கப்பல்

கொழும்பு, ஓக. 6

18 ஆயிரம் மெற்றிக் தொன் உரத்துடன் கப்பல் ஒன்று நேற்றுமுன்தினம் இரவு கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நிதியுதவியின் கீழ் இந்த உரம் வியட்நாமில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. உரத்துக்காக விவசாயிகள் மத்தியில் கோரிக்கை நிலவுவதால் உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)




## நூலகம் திறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 6

பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலையில் அமைக்கப்பட்ட புதிய நூலகம் நேற்றுச் சனிக்கிழமை காலை திறந்துவைக்கப்பட்டது.

அமரர் திருமதி பரமேஸ்வரி செல்லகாந்தனின் நினைவாக இந்த நூலகம் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் தி.மோகனபாலன் தலைமையில் நடைபெற்ற நூலகத் திறப்புவிழா நிகழ்வில் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.எஸ்.கோகுலேந்திரா உட்பட நூலக உருவாகத்தில் ஒத்துழைத்த பலரும் கலந்துகொண்டனர். (ம)



## போதை ஒழிப்புக்காக விசேட பொலிஸ் குழு

கொழும்பு, ஓக.6

போதைப் பொருள்கள் மற்றும் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை ஒழிப்பதற்காக பொலிஸ் மா அதிபரின் முழுமையான மேற்பார்வையின் கீழ் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் ஆலோசனைக்கு அமைய இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாடு தொடர்பான விடயங்களை பொலிஸ் தலைமையகம் மற்றும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சுக்கு அறிவிப்பதற்கான கடப்பாடு இந்தக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## மூதூர்ப் படுகொலை முன்னணி அஞ்சலி

யாழ்ப்பாணம், ஓக. 6

மூதூர்ப் படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் யாழ்.பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் பங்கேற்றனர். 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 4 ஆம் திகதி அரச கட்டுப்பாட்டிலிருந்த திருகோணமலை - மூதூர் பகுதியில் அரச சார்பற்ற சர்வதேச அமைப்பைச் சேர்ந்த 16 தமிழர்கள் உள்ளடங்களாக 17 உள்ளூர்ப் பணியாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-100)

## மருந்துக் கொள்வனவு முறையில் எதிர்வரும் மாதங்களில் மாற்றம்!

கொழும்பு, ஓக. 6

எதிர்வரும் சில மாதங்களில் அவசர முறைமையின் கீழ் மருந்துகளைக் கொள்வனவு செய்வது முழுமையாக நிறுத்தப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் மருந்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் அவசரத் தேவைகளுக்கு மட்டும் மருந்துகளைக் கொள்வனவுசெய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மருந்துகளுக்கு முன்பதிவு செய்து அவை கிடைப்பதற்கு சுமார் 6 மாதங்கள் முதல் 9 மாதங்கள் ஆகின்றன. மருந்துத் தட்டுப்பாடு ஏற்படும் சந்தர்ப்பங்களிலும், நிதித் தட்டுப்பாடு ஏற்படும் சந்தர்ப்பங்களிலும் அவசர முறைமை ஒன்று பின்பற்றப்படுகின்றது. மருந்துக் கொள்வனவு செய்யும் அவசர முறைமைக்கும், சாதாரண முறைமைக்கும் இடையே கால அளவு மட்டுமே வேறுபடுகின்றது- என்றார். (எ-இ)

## வவுனியாவில் 16 இடங்களில் 'நனோ' குடிதண்ணீர்த் திட்டம்

வவுனியா, ஓக. 6

வவுனியா மாவட்டத்தில் 16 கிராமங்களில் நனோ சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டம் நிர்மாணிக்கப்பட்டு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்தா பங்கேற்று அவற்றைத் திறந்துவைத்தார்.

நிகழ்வில் வவுனியா மாவட்ட செயலர் சரத்சந்திர, பிரதேச செயலர், அரச உயர் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# ஈரானில் தாக்குதல் நடத்த அமெ. திட்டம்

வொஷிங்டன், ஒக. 6

வர்த்தகக் கப்பல்கள் மூலம் அமெரிக்கத் துருப்புகளைத் தரையிறக்கி ஈரானைத் தாக்குவதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன. இதனால் மத்திய கிழக்கில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் ஈரானுக்கு நெருக்கமாக உள்ள நாடுகளில் ஒன்றான பஹ்ரெய்ன் அமெரிக்காவின் மத்திய கிழக்குக் கோட்டை என்று வர்ணிக்கப்படுகின்றது. இங்கு அமெரிக்கக் கடற்தளங்களும் உள்ளன. இந்த நிலையிலேயே பஹ்ரெய்ன் கடல்வழியைப் பயன்படுத்தி ஈரானை அமெரிக்கா தாக்கவுள்ளது என்றும் இது தொடர்பான அறிக்கை அமெரிக்க ஜனாதிபதி பைடனின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் உற்பத்தியின் கேந்திர நிலையமாக ரஷ்யாவின் கிரீமியக்குடா காணப்படுகின்ற நிலையில், தற்போது இடம்பெற்றுவரும் ரஷ்யா - உக்ரைன் போரால் உலகளாவிய ரீதியில் எரிபொருள் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. தற்போது எண்ணெய்வளம் மிக்க நாடான ஈரானில் அமெரிக்கா போரை முன்னெடுத்தால் அது எரிபொருள் உற்பத்தியில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஈரான் சர்வதேச விதிமுறைகளைப் புறந்தள்ளி யுரேனியத்தைச் செறிவூட்டுகின்றது என்று அமெரிக்கா தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வருகின்றது. அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான தூதரக உறவுகளும் தற்போது அற்றுப் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ஐ.எஸ். அமைப்பின் தலைவர் கொலை!

டமஸ்கஸ், ஒக். 6

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவரான அல் குவார்சி கொல்லப்பட்டுவிட்டார் என்று அந்த அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக் சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பின் பேச்சாளர் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளார். ஐ.எஸ். அமைப்பு சிரியாவின் இட்லிப் பகுதியிலும் இதர புறநகர்ப் பகுதிகளிலும் தற்போது செயற்பட்டு வருகின்றது. இட்லிப் பகுதியில் ஹயத் அல் ஷாம் அமைப்புடன் இடம்பெற்ற ஆயுத மோதலிலேயே அல் குவார்சி கொல்லப்பட்டுள்ளார். ஹயத் அல் ஷாம் அமைப்பு துருக்கி அரசாங்கத்தின் ஆதரவுடன் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் சுய உற்பத்தி கண்காட்சி!

கொடிகாமம், ஓக. 6


வேள்ட் விஷன் நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்ற சிறுவர்களின் சுய உற்பத்தி சந்தைப்படுத்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மிருசுவிலில் இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் இரா.சர்வேந்திரன், வேள்ட் விஷன் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் ஜெ.சரோன், இதம் நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் செ.மயூரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

உசன் கிராமத்தைச் சேர்ந்த 12 -18 வயது வரையான சிறுவர்கள் தமது சுய உற்பத்திப் பொருள்களைக் காட்சிப்படுத்தினர்.

சிறுவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காகவும் சுயதொழில் சார்ந்த உற்பத்திகளை கிராம மட்டத்தில் மேற்கொள்வதற்காகவும் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி-159)





# நாடாளுமன்ற அமர்வுகள் நாளைமறுதினம் ஆரம்பம்

**கொழும்பு, ஓக. 6**

**நாடாளுமன்றத்தின் அடுத்தகட்ட அமர்வுகள் நாளைமறுதினம் 8ஆம் திகதி தொடக்கம் 11ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன.**

அதன்படி, நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை ஆளும் கட்சியால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கமைய 2023 ஆம் ஆண்டுக்கான அரையாண்டு அரசிறை நிலைமை அறிக்கை தொடர்பான ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறவுள்ளது.

ஓகஸ்ட் 9ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் மாலை 5 மணி வரை பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டவரைவின் இரண்டாம் மதிப்பீடு மற்றும் கடற்றொழில் மற்றும் நீர்வாழ் உயிரினங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அதன் பின்னர், 5 மணி முதல் 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கமைய சபை ஒத்திவைப்பு வேளையின்போதான விவாதம் இடம்பெறவுள்ளது.

ஓகஸ்ட் 10ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கமைய பெருந்தோட்ட சமூகம் தற்போது எதிர்கொள்ளும் சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் தொடர்பில் ஒத்திவைப்பு விவாதம் இடம்பெறவுள்ளது.

ஓகஸ்ட் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணி முதல் மாலை 5 மணி வரை தனியார் உறுப்பினர் பிரேரணைகள் பிரேரிக்கப்படவுள்ளன. (ம)

# சூழகம் அமைப்பால் கற்றல் உபகரணம்

யாழ்ப்பாணம், ஓக. 6

சூழகம் அமைப்பால் நயினாதீவு கணேசா பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

தீவகம் புளியங்கூடலைச் சேர்ந்த சுவிற்ஸர்லாந்தில் வசிக்கும் சமூகப்பற்றாளரின் நிதியனுசரணையில் சூழகம் அமைப்பின் ஊடாக சுமார் 40 ஆயிரம் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சூழகம் அமைப்பின் இணைப்பாளர் கருணாகரன் குணாளன் அவற்றை பாடசாலை அதிபரிடம் கையளித்தார். (ச-ரி)

# கருத்தாய்வுப் போட்டி: ஆக்கங்கள் அனுப்புக

யாழ்ப்பாணம், ஓக .6

குவியம் மற்றும் தேசிய கல்வியியற் கல்லூரி ஆகியவை இணைந்து நடத்தும் கருத்தாய்வுப் போட்டிக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் போட்டியில் கனிஷ்ட பிரிவு, சிரேஷ்ட பிரிவு, பல்கலைக்கழக மாணவர்கள், மாணவ ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள் உள்ளிட்டோர் பங்குபற்ற முடியும்.

ஆக்கங்கள் 300- 600 சொற்களுக்குக் குறையாமல் 'இலங்கை வாழ்மக்கள் எதிர்நோக்குகின்ற சமூகம் சார் பிரச்சினைகளை அடையாளங்காணுவதோடு அந்தப் பிரச்சினைகளிலிருந்து மீள்தல்' எனும் கருப்பொருளில் அமைதல் வேண்டும்.

ஆக்கங்களை சுயவிவரத்துடன் பதிவுத் தபால் மூலமாக 'இல. 41, கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு எதிர்வரும் செப்ரெம்பர் 7ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-ரி2)

# ஆடி அமாவாசை விரதம்; கீரிமலையில் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஓக. 6

ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலையில் அடியவர்கள் பிதிர்த்தர்ப்பணங்களை நிறைவேற்றுவதற்கென சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆடி அமாவாசை தினமான எதிர்வரும் 15ஆம் திகதி தமது முன்னோர்களுக்குத் தர்ப்பணம் கொடுத்து கீரிமலை புனித தீர்த்தத்தில் நீராடி ஆத்ம சாந்திப் பிரார்த்தனை மேற்கொள்வதற்காக பல்வேறு இடங்களிலிருந்தும் பல்லாயிரம் மக்கள் வருகை தரவுள்ளனர்.

அந்தவகையில் வருகை தரும் மக்களின் நன்மைகருதி கீரிமலையிலுள்ள சிவபூமி மடத்தில் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தேநீர் வசதிகளும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# நூல் வெளியீடு

சாவகச்சேரி, ஓக. 6

மிருசுவில்-விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய ஆசிரியை திருமதி ஜெ.றொ.நந்தினி எழுதிய ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கான 'கற்பனைச் சிறகுகள்' கட்டுரை நூல் வெளியீடு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் கலந்துகொண்டார். (ச-ரி-9)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பார்த்த பணம் கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி கிடைக்கும். செலவுகள் ஏற்படக்கூடும்.

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவுகளால் கையிருப்பு கரையும்.

**மிதுனம் :** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். தொடங்கும் முயற்சிகள் சாதகமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். வழிபாடுகளை நிகழ்த்தும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைக்கக்கூடும். பிரச்சினைகள் ஏற்படக் கூடும்.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் இழுபறியானாலும் முடிந்துவிடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். கூடுதல் செலவுகள் ஏற்படக்கூடும்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்து சேரும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும்.

**விருச்சிகம் :** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். உறவினர்கள் வழியில் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். புதிய முயற்சிகளை மேற்கொள்ளவேண்டாம். உறவுகளால் செலவுகள் ஏற்படும். தலையீடு காரணமாக குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். தந்தை வழி உறவினர்களால் காரிய அனுகூலம் ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் பணம் கேட்டு வருவார்கள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிரிகளால் பிரச்சினை ஏற்படலாம்.

**மீனம்:** பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். வீண்மனஸ்தாபம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நாளொரு நல்வார்த்தை

"எனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை நான் புரிந்து கொள்ளவில்லை என்றால், நான் மனிதனே இல்லை"

– அம்பேத்கர்

# விதைப்பதே அறுவடை!


முட்கள் மீதும், கற்பாறைகள் மீதும் விழும் விதைகள் ஈரமில்லாமல் இறந்துபோகும். தெருவோரமும் நடைபாதைகளிலும் விழும் விதைகளை பறவைகள் உணவாக எடுத்துக்கொள்ளும். விதைகள் விளைநிலத்தில் வீழ்ந்தாலேயே பயன் தரும் என்கின்றது விவிலியம். இங்கே விதைகள் எனப்படுபவை 'எம் செயல்கள்' நாம் எவ்வாறான செயல்களை விதைக்கின்றோமோ அவைதான் அறுவடைகள். விரும்பத்தகாத வினைகளை விதைத்தால் அறுவடையும் அதுவே.

உலக அளவில் இந்த ஆண்டு 'எல் நினோ' ஆண்டாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. வெப்பச் சமநிலை சீரற்றுச் சென்று, ஆகப்பெரும் தாக்கங்களை ஏற்படுத்தவல்ல உச்சபட்ச அடையாளப்படுத்தலே 'எல் நினோ'. பில்லியன் டொலர் பெறுமதியான பொருளாதார இழப்புகளையும், வர்த்தகப் பேரழிவுகளையும், உயிர்பறிப்புகளையும் ஏற்படுத்தும் அளவுக்கு 'எல் நினோ' கொடியது. இந்த ஆண்டுக்குரிய அறிவிப்பின் பின்னரான தாற்பரியங்களையும் ஆபத்தம்சங்களையும் மேற்கத்தேய நாடுகள் அண்மைக்காலமாக நன்றாக உணரத் தலைப்பட்டுள்ளன. 'வெப்பச் சாவுகள்' ஏற்படும் அளவுக்கு அங்கு நிலைமை கைமீறியிருக்கையில், இந்தச் சர்வதேசப் பேரிடர், இலங்கையும் கெட்டியாகப் பிடித்திருக்கின்றது.

இலங்கையில் வெப்பச்சாவுகள் ஏற்படும் அளவுக்கு நிலைமை கைமீறவில்லையாயினும், இப்போது ஏற்பட்டிருப்பது அதற்கு முன்னரான அழிவுநிலையே. இலங்கையிலுள்ள அனைத்துக் குளங்களும், ஒன்றுகூட விதிவிலக்கில்லை என்று சொல்லும் அளவுக்கு வெப்பப் பேரிடருக்கு ஆட்பட்டிருக்கின்றன. பல்வேறுபட்ட நீர்த்தேக்கங்களும், குளங்களும் தண்ணீரின் இருப்பை வெகுவாக இழந்திருக்கின்றன. இதன் தீவிரத்தன்மை எத்தகையதெனில், 'உடவலவ நீர்த்தேக்கத்திலிருந்து விவசாயம் உட்பட எந்தவொரு நடவடிக்கைக்காகவும் தண்ணீர் திறந்துவிடப்படாது' என்று பகிரங்கப்படுத்தப்படும் அளவுக்குக் கனதியானது. இதையடுத்து அந்த நீர்த்தேக்கத்தை ஒற்றைத் தெரிவாகக் கொண்டு விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்ட சுமார் 30 ஆயிரம் விவசாயிகளின் வாழ்வு, வெப்பப் பேரிடரை விடவும் வலிதான வெம்மைக்குள் தள்ளத் தலைப்பட்டிருக்கின்றது, தமிழர் தாயகமும் இதற்கு விதிவிலக்கில்லை.

வடக்கில் கடந்த சில நாள்களாக உணர் வெப்பநிலை 34 பாகை செல்சியஸ் என்று அறிவித்திருக்கின்றார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறை விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா. எட்டாம் திகதிக்குள் மழையொன்று கிட்டாவிட்டால் நிலைமை கைமீறும் என்றும் அவர் எச்சரித்திருக்கின்றார். இங்கே, அவர் குறிப்பிடும் 'கைமீறும் நிலை', தண்ணீரின் இருப்பிழப்பே. வடக்கிலுள்ள பல குளங்களும் வற்ற ஆரம்பித்திருக்கின்றன. ஏற்கனவே மேய்ச்சல் தரை இல்லாமல் அலைந்துதிரிந்த கால்நடைகளுக்கு இந்த வெப்பகாலம் 'உள்ளதையும் கெடுத்த கதையாகவே' அமைந்திருக்கின்றது. குறைந்தபட்சம் நீராதாரம்கூட இல்லாத நிலைக்கு இந்த வாயில்லா ஜீவன்கள் தள்ளப்பட்டிருக்கின்றன. இன்னும் சில வாரங்களில் தீவகப் பகுதிகள் வரலாறு காணாத தண்ணீர்ப்பஞ்சத்தை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். ஆனால், இதற்கெல்லாம் பொத்தம்பொதுவான இயற்கை மீது நாம் பழிபோட்டுவிட்டு நகர்ந்துவிடமுடியாது. ஏனெனில் நாம் விதைத்த விதைகள் அத்தகையவை.

கட்டடங்களை வானுயர எழுப்புவதில் எமக்கு இருக்கும் ஆர்வத்தில் குறைந்தபட்சம்கூட தண்ணீரின் இருப்பை உறுதிசெய்யும் கட்டுமானங்களை அமைப்பதில் இல்லை. மழைநீர் நிலத்துக்குள் ஊறியே நிலத்தடித் தண்ணீராக உருப்பெறுகின்றது. இதுவொரு இயற்கைச் சுழற்சி. ஆனால், இப்போதெல்லாம் வீடுகளின் முற்றங்கள் மண் முற்றங்களாக அல்லாமல் கொங்கிறீட் முற்றங்களாக மாற்றம்பெற்றுவிட்டன. தரைக்கற்கள் வணிக வளாகங்களையும், ஆலயங்களையும் அலங்கரிக்கின்றன. மழைநீர் ஊறுநிலையை அடைவதற்கு முன்னர் வலிந்து வடியச் செய்யப்படுகின்றது. மரங்கள் சகட்டுமேனிக்கு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மணல் வகைதொகையின்றி அகழப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இயற்கையுடனான பகை மனிதர்களுடனான பகைபோன்றதல்ல. இதுவொரு பூமாரங் விளையாட்டு. எவ்வளவு வேகமாக நாம் தாக்குகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு வேகமாகவும் நேர்த்தியாகவும் இயற்கை திருப்பித்தாக்கும். அதன் காட்சிகளே இவை. நல்ல விதைகளை விதைக்காத பட்சத்தில் வரும் வருடங்களின் அறுவடைகள் இன்னுமின்னும் மோசமாகவிருக்கும் என்பது மட்டும் இரண்டாம் கருத்தின்றிய விடயம்.



# வடக்கு - கிழக்குப் பகுதியில் பௌத்தத்துக்கு பேராபத்து!

## கொளுத்திப் போடுகிறார் சோபித தேரர்



**யாழ்ப்பாணம், ஓக. 6**

**வடக்கு- கிழக்கு மக்களிடையே இன ஒற்றுமை, சகோதரத்துவம் என்பன இல்லை. பௌத்த வழிபாட்டிடங்களின் நிலைமை ஆபத்தாகி வருகின்றது. பௌத்தத்துக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையில் முன்னெடுக்கப்பட்ட வழிபாடுகளின் போது தமிழ் அரசியல்வாதிகள் உட்பட பிரதேசவாசிகள் செயற்பட்டமை கண்டிக்கத்தக்க விடயமாகும். வடக்கு - கிழக்கிலுள்ள பௌத்த வழிபாட்டிடங்களின் நிலைமை ஆபத்தாகி வருகின்றது. அங்குள்ள பௌத்த வழிபாட்டிடங்களையும் பாரம்பரியத்தையும் பேண ஒரு செயன்முறை தயாரித்து நடைமுறைப்படுத்தவேண்டும். பௌத்த விகாரைகள் தொல்பொருள் அடையாளமிடப்பட்ட இடங்களைப் பாதுகாக்க - விகாரைகளின் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிப்பவர்களுக்கு எதிராக - அரசாங்கம் தலையிட்டு உத்தரவிடவேண்டும். தென்னிலங்கை பௌத்த மக்கள் ஏனைய மதங்களுடன் சகோதரத்துவத்துடன் செயற்படுகிறார்கள். ஆனால், வடக்கு - கிழக்கில் உள்ளவர்கள் ஏன் அவ்வாறு செயற்படுவதில்லை? - என்றார்.

(ச-இ)

### எரிபொருள் விவகாரம்;

# சீனாவினுடைய நலனுக்காகவே விலை உயர்வு

சீன எரிபொருள் விநியோக நிறுவனத்தின் நலனைக் கருத்திற்கொண்டே, எரிபொருள்களின் விலைகள் அண்மையில் உயர்த்தப்பட்டன என்று தொழிற்சங்கவாதியான ஆனந்த பாலித தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- எரிபொருள் சந்தையில் வெளிநாட்டு நிறுவனங்களை ஈடுபடுத்தினால் போட்டித்தன்மை காரணமாக எரிபொருள் விலை குறையும் என அரசாங்கம் முன்னதாகக் கூறியது. இப்போது எரிபொருள்களின் விலையை அரசாங்கமே தீர்மானிக்கிறது - என்றார்.

(ம)

# மின் கட்டண அதிகரிப்பில்லை

கொழும்பு, ஓக. 6

மின் கட்டண அதிகரிப்பு தொடர்பில் மின்சார சபையால் கோரிக்கை முன்வைக்கப்படவில்லை என்று இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

6 மாதத்துக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் வருடத்துக்கு இருமுறை மின் கட்டணம் திருத்தப்படும் என்று பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். மின் கட்டணத்தை திருத்துவதற்கான யோசனை மின்சார சபையால் முன்வைக்கப்பட்டுள்ளதாக மின் பாவனையாளர்களின் சங்கம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-இ)

**நாளை** 07.08.2023 திங்கட்கிழமை ஆடி 22

சுபநேரம் : 12.04 – 01.34
ராகுகாலம் : 07.34 – 09.04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடவலவ நீர்த்தேக்கத்தில் நீர் விநியோகம் நிறுத்தம்!

கொழும்பு, ஓக. 6

**உடவலவ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் மிகவும் குறைந்துள்ளதால் நேற்று முதல் எந்த நடவடிக்கைக்கும் அங்கிருந்து நீர் விநியோகிக்கப் படாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

உடவலவ நீர்த் தேக்கத்துக்குப் பொறுப்பான பொறியியலாளர் சுஜீவ குணசேகர இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

உடவலவ நீர்த் தேக்கத்தின் நீர் மட்டம் 1.4 சதவீதமாகக் குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை சமனலவெவ நீர்த் தேக்கத்தின் நீர்மட்டம் தற்போது 11.3 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அதேவேளை, எல்நினோ காலநிலை தாக்கம் காரணமாக எதிர்காலத்தில் கடும் வறட்சி அல்லது அடுத்த பெரும்போக காலத்தில் கடும் வெள்ள நிலைமை ஏற்படும் சாத்தியம் உள்ளது என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டியுள்ளார். (எ-இ)

## உடவலவ விவசாயிகளுக்கு உடன் தண்ணீர் வழங்குக

*கிளிநொச்சியில் கோரிக்கை*

கிளிநொச்சி, ஓக.6

உடவலவ விவசாயிகளின் கோரிக்கை நியாயமானது என்றும், அரசாங்கம் அவர்களுக்குரிய நீரை வழங்க வேண்டும் என்றும் வட்டக்கச்சி கமக்காரர் அமைப்பின் செயலாளர் இ.இளங்குமரன் தெரிவித்தார்.

நேற்றுக் கிளிநொச்சியில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

25 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்ட நெல்லுக்கு அரசாங்கம் நீர் வழங்காது இருக்கின்றது. 30 ஆயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரம் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது. ரணில் அரசாங்கம் பெரும் பொருளாதாரக் குற்றத்தைச் செய்துவருகின்றது. விவசாயிகளின் கோரிக்கைகளைச் செவிமடுக்காமையாலேயே கடந்த அரசாங்கம் வீடு செல்ல நேரிட்டது - என்றார். (எ-113)



## குடும்பத் தலைவர் சுட்டுக் கொலை!

பொலநறுவை, ஓக. 6

பொலநறுவை - இலங்காபுரத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை குடும்பத்தலைவர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆர்.சமரக்கோன் (வயது - 42) என்பவரே இவ்வாறு சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வரே இந்தப் படுகொலைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள பொலிஸார், சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

## சைக்கிளோட்டப் போட்டி



யாழ்ப்பாணம், ஓக. 6

மானிப்பாய் மகளிர் கல்லூரியின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சைக்கிளோட்டப்போட்டி நேற்றுச் சனிக்கிழமை இடம்பெற்றது.

சுதுமலை அம்மன் கோவில் முன்றிலில் இருந்து ஆரம்பமான சைக்கிள் ஓட்டப்போட்டி தாவடி, மருதனார்மடம், உடுவில், மருதடி ஊடாக 10.3 கிலோமீற்றர் தூரத்தைக் கடந்து கல்லூரி முன்றிலைச் சென்றடைந்தது.

சைக்கிள் ஓட்டப்போட்டியை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் இளம்பிறையன் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில் மானிப்பாய் மகளிர் கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

சைக்கிள் ஓட்டப்போட்டியில், முதலாம் இடத்தை கா.நிருஜா, 2ஆம் இடத்தை சா.பிரவீனா, 3ஆம் இடத்தை மோ.சந்தியா ஆகியோர் பெற்றுக்கெண்டனர். (ம-100)

## காற்றினுடைய வேகம் வடக்கில் அதிகரிக்கும்

கொழும்பு, ஓக. 6

வடக்கு மாகாணத்தில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றர் வரையில் அதிகரித்துக் காணப்படும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல இடங்களில் இலேசான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் ஒரு சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். அத்துடன், தீவின் மற்ற பகுதிகளில் முக்கியமாக சீரான வானிலை நிலவும்.

இடியுடன் கூடிய மழையின்போது தற்காலிகமாகப் பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளப் போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள் - என்றுள்ளது. (ம)

## நீர்க்கட்டணத்துக்கும் இனி விலைச் சூத்திரம்

கொழும்பு, ஓக.6

நீர்க் கட்டணத்தில் 6 மாதங்களுக்கு ஒருமுறை திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கான விலைச்சூத்திரத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

நீர் சுத்திகரிப்புக்காகச் செலவாகும் மின்சாரக் கட்டணம், இரசாயனக் கட்டணம், பொருள்கள் என்பவற்றை உள்ளடக்கியதான நீர் சுத்திகரிப்பு செலவுகளின் அடிப்படையில் விலைச்சூத்திரம் தயாரிக்கப்படுகின்றது.

செலவினங்களுக்கு அமைய 6 மாதங்களுக்கு ஒரு முறை நீர்க் கட்டணம் தீர்மானிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் மின்கட்டணம் குறைக்கப்படும் பட்சத்தில், நீர்க் கட்டணமும் குறையும் வாய்ப்புள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறையாகும் வகையில், நீர்க் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய கட்டண திருத்தத்தின் பிரகாரம் குறைந்தளவு நீர் அலகுகளைப் பயன்படுத்துபவர்களுக்கு அதிக சதவீதத்தாலும், அதிகளவு நீர் அலகுகளைப் பயன்படுத்துபவர்களுக்கு குறைந்த சதவீதத்தாலும் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. (எ-இ)

## துப்பாக்கி சூட்டில் ஒருவர் காயம்

கொழும்பு, ஓக.6

கம்பஹா, வெலிவேரிய பகுதியில் நேற்று நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வெலிவேரிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எம்பரலுவ வீதி, ஜுப்லி மாவத்தை பகுதியில் காரில் பயணித்துக் கொண்டிருந்த நபர் ஒருவர் மீது மோட்டார் சைக்கிளில் வந்த அடையாளம் தெரியாத இருவரால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூடு மேற்கொண்ட சந்தேகநபர்கள் மோட்டார் சைக்கிளை அதே இடத்தில் கைவிட்டு, லொறியொன்றில் தப்பிச் சென்றுள்ளனர்.

காயமடைந்த நபர் கம்பஹா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-இ)



யாழ். கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை நிர்வாகத்தினர் விடுத்த வேண்டுகோளுக்கமைய 38 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் சந்நிதியான் ஆச்சிரமத்தால் அண்மையில் வழங்கப்பட்டன. அத்துடன் பொருளாதாரம் நலிவுற்ற மாணவி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டியும் வழங்கப்பட்டுள்ளது. (ம-66)



## கஜூ தோட்டத்துக்கு விஷமிகள் தீ வைப்பு!

கிளிநொச்சி, ஓக.6

வட்டக்கச்சி, ஆறுமுகம் வீதியில் உள்ள தனியார் ஒருவரின் கஜூ தோட்டத்துக்கு இனந்தெரியாதவர்கள் தீ வைத்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

கஜூமரங்கள், தென்னைகள் தீயில் எரிந்துநாசமாகியுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆவணங்கள் இல்லாத 4 பேர் நேற்றுக் கைது

## நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட விசேட சோதனையில் சிக்கினர்

ஊதுவத்தி வியாபாரம் மற்றும் சோதிடம் சொல்லுதல் என்ற பெயரில் யாழ்ப்பாண நகரப் பகுதியில் உலாவித்திரிந்த வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 4 பேரை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

நல்லூர்த் திருவிழா உள்ளிட்ட பெருந்திருவிழாக் காலத்தில் திருட்டுகளில் ஈடுபடுவதற்காக வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ளனர் எனக் கிடைத்துள்ள இரகசியத் தகவல்களுக்கு அமைவாக, யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத்தின் உத்தரவுக்கு அமைவாக யாழ். மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் பிரதீப் தலைமையிலான குழுவினர் விசேட சுற்றிவளைப்புச் சோதனைகளை நேற்றுமுதல் ஆரம்பித்துள்ளனர்.

இதன்போது யாழ்ப்பாண நகரப்பகுதியில் ஊதுவத்தி வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் மற்றும் சோதிடம் கூறுபவர்கள் சந்தேகத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இவர்களில் உரிய ஆவணங்களையும், ஆள் அடையாளத்தையும், வதிவிடங்களையும் உறுதிப்படுத்தத் தவறிய கொழும்பு மற்றும் புத்தளத்தைச் சேர்ந்த 4 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சோதனை நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்த பொலிஸார், சந்தேகத்துக்கிடமானவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனக் குறிப்பிட்டனர்.

(அ-ஒ.26)

### வீடு விற்பனைக்கு

யாழ். ஈச்சமோட்டைப் பகுதியில் 2 பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு.

**077 949 1161**

### வேலையாட்கள் தேவை

யாழ். K.K.S. வீதி, கோண்டாவில் பகுதியில் உணவகமொன்றிற்கு

*உணவு பரிமாறுபவர் (ஆண்,பெண்)

*ரொட்டி வேலை செய்பவர்

*கொத்து, ரைஸ் போடத் தெரிந்தவர்

போன்றவற்றிற்கு வேலையாட்கள் தேவை.

**077 804 2561, 077 803 2561**

### ST. JOHN'S COLLEGE, JAFFNA VACANCY

Applications are hereby invited from qualified persons for the following vacancy:

✓ **Teacher - Political Science - A/L**

Please send your complete CV with the contact details of two non-related referees by registered post to reach before 18th August 2023 to the address below:

**The Principal**
**St. John's College, Jaffna.**


(CR/40327)AH-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 13.11.1950 | மறைவு 05.08.2023

### சிவசுப்பிரமணியம் ஞானசேகரம்

(ராஜ் ஸ்ரோர்ஸ் உரிமையாளர் (சேகர்) கஸ்தூரியர் றோட், யாழ்ப்பாணம்.)



ஊரிக்காடு, வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும், 38/8, மணல்தறை லேன், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசுப்பிரமணியம் ஞானசேகரம் (சேகர்) நேற்று (05.08.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஊரிக்காடு (Baby Soda) சிவசுப்பிரமணியம் கோசலை அம்மா தம்பதியரின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான காத்தலிங்கம் கனகலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சந்திராதேவியின் பாசமிகு கணவரும், அபிஷேக், பிரதீப், லக்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும், நிஷாந்தினியின் அன்பு மாமனாரும், ஞானசௌந்தரி (London), காலஞ்சென்ற ரூபசௌந்தரி மற்றும் விமலாதேவி, சுபத்திராதேவி, சரோஜினிதேவி, பத்மாதேவி, காலஞ்சென்ற ராஜசேகரம் மற்றும் பாலசேகரம், காலஞ்சென்ற குணசேகரம் மற்றும் நிர்மலாதேவி, குலசேகரம், ஸ்ரீதர் (London) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை 38/8, மணல்தறை லேனில் உள்ள அவரது இல்லத்தில் பி.ப 02.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**T.P:077 925 1048**

தகவல்: குடும்பத்தினர்.

(CS 25858)A-1

## மரண அறிவித்தல்



### மாலா கொலஸ்ரிக்கா பத்மநாதன்

யாழ்ப்பாணம் ராஜேந்திரா வீதியை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட மாலா கொலஸ்ரிக்கா பத்மநாதன் கடந்த (30.07.2023) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வின்சன் றோசலின் தம்பதியரின் சிரேஷ்ர புதல்வியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், பத்மநாதனின் அன்பு மனைவியும், கர்சன், சர்மிலா, கனுசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மாலினி, பிறின்ஸ், றஜினி, நிறோஜினி, ஜென்கின்ஸ் ஆகியோரின் சகோதரியும், அருளானந்தம், சந்தானலட்சுமி ஆகியோரின் மைத்துனியும், லேனா, டேவிட் ஆகியோரின் மாமியாரும், மாலியாவின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி 08.08.2023 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணிதொடக்கம் 12.00 (ஜேர்மன் நேரம்)) மரியா தேவாலயம், செசன், ஜேர்மனியில் இடம்பெற்று, அதனைத் தொடர்ந்து பிற்பகல் 12.00 - 1.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் 2.00 மணியளவில் நல்லடக்கம் செய்யப்படும்.

அன்றைய தினம் அன்னாரின் இரங்கல் ஆராதனை 313, பாங்சால் வீதி, யாழ்ப்பாணத்தில் பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அனர் றஜினி (சகோதரி)
313, பாங்சால் வீதி,
யாழ்ப்பாணம்.
0094 76197 2689

தகவல்:
பொ.பத்மநாதன் (கணவர்)
0049 [illegible]
(ஜேர்மனி)

## மரண அறிவித்தல்

பிறப்பு 13 . 10 . 1956



இறப்பு 05 . 08 . 2023

### திருமதி பாலபாஸ்கரன் ராகினி

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கட்டப்பாலி வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலபாஸ்கரன் ராகினி அவர்கள் நேற்று (05.08.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரட்ணம் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராஜரட்ணம் விஜயலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், பாலபாஸ்கரனின் பாசமிகு மனைவியும், பாலகார்த்திகா (UK), பாலமயூரா (ஆசிரியர் - யா/ உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம்), பாலரஜீவன் (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவகேதீசன் (UK), ஜெயதீபன் (சிலிங்கோ இன்சூரன்ஸ் - சாவகச்சேரி), மதுசா (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும், நாகநவீன், அஸ்வின், கம்சினி, லக்ஷயன், ஆதீஸ் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், ரஜனி (திருகோணமலை), ராதா (கொழும்பு), றேணுகா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அருள்நங்கை (புதிய உயர் கல்லூரி-யாழ்ப்பாணம்), அருள்வேல் மற்றும் கமலாம்பிகை (பிரான்ஸ்), இராஜநங்கை (ஆசிரியை, யா/மானிப்பாய் மெமோறியல்), காலஞ்சென்ற செந்தில்குமரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பரராஜசிங்கம், யோகநாதன், ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் சகலியும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் செல்வரஞ்சன் (France), காலஞ்சென்ற சிவபாலன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், சுதர்சன் (UK), பிரஷாந்தி, சதீசன் சிந்துஜா (Ausatralia) ஆகியோரின் பெரிய தாயாரும், ஜெனார்த்தனன் (Canada), திவாகர், சாங்கவி, அனோஜன், நிறோஜன் (Germany) ஆகியோரின் சிறிய தாயாரும், சர்மிலா, ஜெயந்தன், சிந்துஜன், விதுஷன், காலஞ்சென்ற சந்துதன் மற்றும் தேவசந்துதன், தேவசாத்வீகன் ஆகியோரின் அன்பு அத்தையும், கிருஷ்ணகுமார், உதயகுமார் ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2023) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையான்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 25854) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Heritage Agri Private Limited

**பதவி வெற்றிடங்கள்**

இயக்கச்சியில் அமைந்துள்ள சேதன விவசாய முறையில் முருங்கை இலை பயிரிட்டு நவீன இயந்திர மயமாக்கல் மூலம் முருங்கை இலை தூள் தயாரித்து tablet மற்றும் Capsule வடிவில் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன.

### வேளாண் கள மேற்பார்வையாளர் - பயிலுனர்
### Trainee Agriculture Field Supervisors

விவசாயத்தில் மிகுந்த ஈடுபாடுள்ள தங்களின் எதிர் காலத்தை இத்துறையில் உருவாக்கி கொள்ளும் எண்ணம் கொண்ட க.பொ.த உயர்தரம் சித்தி எய்திய அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

தேர்ந்தெடுக்கப் படும் பயிலுனருக்கு நவீன சேதன விவசாய முறையில் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சியின் பின்னர் எமது ஸ்தாபனத்தில் நிரந்தர வேலையில் பணி நியமனம் செய்யப்படுவர்.

### உற்பத்தி மேற்பார்வையாளர்.
### Production Supervisors

NVQ தகைமையுள்ள Mechanical அல்லது Electrical தொழில்நுட்பவியலாளர்கள் 2 அல்லது 3 வருட அனுபவத்துடன் விண்ணப்பிக்கலாம். முன் அனுபவம் இல்லாதோரும் விண்ணப்பிக்கலாம்.

தேர்ந்தெடுக்கப்படும் மேற்பார்வையாளர்களுக்கு நவீன இயந்திரங்களின் செயல்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு நிரந்தர பணி நியமனம் செய்யப்படுவர்.

விண்ணப்பங்களை பின் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

QUICK ADS

மனித வள மேலாளர்
ஹெரிடேஜ் அக்ரி பிரைவேட் லிமிடெட்
வாழைத்தோட்டம்
இயக்கச்சி.

HR Manager
Heritage Agri Private Limited
Valaiththoddam
Iyakkachchi

மின்னஞ்சல் : hrdlk@isfindustries.com

---

## வேலையாள் தேவை

யாழ்நகரில் உள்ள **குளிர்பான கடைக்கு ஆண்** வேலையாள் தேவை.

**077 644 5529, 077 306 3733**

---

## வகுப்புக்கள்

தரம் - 6 - O/L வரை தமிழ், ஆங்கில மொழி மூல கணிதம், விஞ்ஞான வகுப்புகள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

**077 639 1935**

---

## தேவை

கோண்டாவில் கொக்குவில் பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை, தரகர்கள் தேவையில்லை.

**071 533 1889**

---

## வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கும் வியாபார கடைக்கு ஆண் வேலையாள்கள் தேவை. **சம்பளம் 30,000/-** முன்னனுபவம் தேவையில்லை.

**078 911 3766**

---

## வேலையாள் தேவை

கொழும்பில் கட்டட வேலை மற்றும் அலுவலக வேலைக்கு ஆண் / பெண் தேவை.
சிங்களம், தமிழ், ஆங்கிலம், ஹிந்தி தெரிந்தவர்கள் வரவேற்கத்தக்கது.
அலுவலக வேலைக்கு கணக்கியல் திறன் கொள்வது அவசியம்.

**078 561 2896**
**076 948 3666**

---

## முகாமையாளர் தேவை

யாழ். நகரில் அமைந்துள்ள அண்ணாமலையான் ஸ்ரீராகவேந்திரர் திருமண மண்டபத்துக்கு **கணக்கு எழுதத் தெரிந்தவரும் மற்றும் முகாமைத்துவத்தில் (Manager Cum Accountant ) அனுபவமுடைய முகாமையாளர் தேவை.** (28 - 40 வயதுக்கு உட்பட்ட ஆண்கள்) கீழ்க்காணும் முகவரிக்கு சுயவிருப்பங்களுடன் விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இலக்கம்:- JF /1048**
**உதயன் பப்ளிக்கேசன்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

---

## Jaffna College - Vaddukoddai

### Vacancy - Health and Physical Education teacher

Jaffna College is a prestigious and long standing private school in Vaddukoddai, Sri Lanka. The school is looking for a passionate, dynamic, inspirational and hard-working individual for the above position

**Requirements**

- Academic Qualifications: Bachelor of Sports Science (B.Sc.).
- Classes to handle: Grade 6 to 11
- Language Proficiency: Fluency in both English and Tamil, with the ability to conduct classes in both languages.

**Applicant should be**

- be able to coach cricket and other sports at Jaffna College.
- be an individual with strong values such as honesty, integrity, sportsmanship and work ethics
- be computer literate.

**Closing date for applications : 13.08.2023**

Applications with the names of two non-related referees should be sent to **hr@jaffnacollege.lk**

**Only short listed candidates will be called for an interview.**

**Principal**

---

## வேலையாள் தேவை

வவுனியா நகரத்தில் தாய் இல்லாத சிறு பெண் தனது சொந்த கடை நடத்துகின்றார் அவருக்கு உதவியாக பெண் ஊழியர் தேவை.

**070 484 5366**

(cr 40344) (N-1)

---

## THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆண்டு 10, 11, 12 வகுப்புகள்
(சிறு குழுக்களாக)

- I.C.T. - செல்வரதன் (B.Com)
- வணிகம் / கணக்கீடு - கிருத்திகா (B.Com)
- ஆங்கிலம் - விக்னேஸ்வரன் ஆச்சார்யார் (M.L.S) London

பிரான்பற்று வீதி, சங்கானை

**077 675 1649**


---

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் க.நாகராஜா

**B.A, M.A, T.K.T. (Cambridge)**

(முன்னாள் விரிவுரையாளர் - கிழக்குப் பல்கலைக்கழகம்.
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)



பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
படிப்புக்கோர் மகுடமாய்
பார்போற்ற வாழ்ந்தீர்கள்
தோளோடு துணை நின்று
துயரிலும் வழி காட்டினீர்கள்
எம் இதயம்
- உங்களையெண்ணி
இடைவிடாது அழுகின்றது
காலம் பல கடந்தாலும்
கலையாது உங்கள்
நினைவுகள்...

தோற்றம் 13.09.1942
மறைவு 16.08.2022

இல.7, விலானை வீதி,
உரும்பிராய்.

(cs.51483) (N - 1)

அழியாத நினைவுகளுடன்
குடும்பத்தினர்

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06
07
1948



மறைவு
16
03
2022

### அமரர் திலகராயர் கைலநாதன்

திதி:- பஞ்சமி (06.08.2023)

குடும்பக் குல விளக்காய் விளங்கிய
எங்கள் அன்புத் தெய்வமே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஆறாது உங்கள் பிரிவுத் துயர்
என்றென்றும் உங்கள் அன்பு நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**என்றும் உங்கள் நினைவுகளுடன்....**

தேவாலய வீதி,
தாவடி.

(CS/25639)AH-1

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
05 • 09 • 1944



மறைவு
24 • 07 • 2023

## திருமதி நடராஜா மகேஸ்வரி (மகேஸ்)

யாழ். தாவடி பாடசாலை வீதியைப் பிறப்பிடமாகவும், இத்தாலி Genova, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா மகேஸ்வரி கடந்த (24-07-2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை நாகரத்தினம் தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகளும், நடராஜா அவர்களின் அன்பு மனைவியும், பொன்னையா (ஓட்டுமடம்), சபாரத்தினம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவபாக்கியம் (ஜேர்மனி), காலஞ்சென்ற கமலேஸ்வரி, பாலசுப்ரமணியம் (இணுவில்), தேவராஜா (ஜேர்மனி), சத்தியபாமா (தாவடி), கமலாதேவி(தாவடி), சரஸ்வதிதேவி, சுபத்திராதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், மைதிலி (இங்கிலாந்து), மாருதி(கனடா), மாலதி(மாலா- கனடா), குமரதாஸ் (குமரன் - இத்தாலி, இங்கிலாந்து), கெசந்திலி(இங்கிலாந்து), கெஜதாஸ்(கெசந்தன் - இத்தாலி, இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிறஞ்சன் (இங்கிலாந்து), கண்ணதாசன்(கனடா), காலஞ்சென்ற ஜெயக்குமார்(கனடா), சாந்தினி(லதா- இங்கிலாந்து), லவீந்திரகுமார் (லவி-இங்கிலாந்து), லிசாலினி(லிசா-இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான இராசநாயகம், திருஞானசம்பந்தர் மற்றும் தங்கலட்சுமி, ஆனந்தரஜனி, காலஞ்சென்ற கனகசிங்கம், சுந்தரலிங்கம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், பூர்வஜா, அஞ்சனன், கவினன், ஸ்ரீபரன், ஜெயப்பிரியன், ஜெயப்பிரவீன், அர்ச்சனா, அபினன், ஹரினி, அருணி, ஆதீஷன், லதுஷா, ஆதேஸ், லஸ்மிகா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(cs25798 ) (N.1)

# மரண அறிவித்தல்

தோற்றம்
23 • 02 • 1951



மறைவு
03 • 08 • 2023

## திரு. சின்னத்துரை தங்கராசா

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், 31A, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சின்னத்துரை தங்கராசா கடந்த (03.08.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நேசம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான துரைராஜா - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், பவளராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், நவரட்ணம் மற்றும் மகேஸ்வரி, நாகம்மா, பரமேஸ்வரி, காலஞ்சென்ற பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவயோகம், மகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், வைகுந்தநாதன், பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோபிகா, மோகன்ராஜ், நிஷாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜனார்த்தனன், தனுஷா, கோபிநாத் ஆகியோரின் அன்பு மாமனாரும், தக்ஷியா, கேஷியா, ஆருஷ், அனிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

31A, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS/25796)AH-1


## வேலையாட்கள் தேவை

சுன்னாகத்தில் இயங்கிவரும் புடைவை விற்பனை நிலையத்திற்கு ஆண், பெண் விற்பனையாளர் தேவை. (பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளவும்.

077 172 3554

## காணி விற்பனை

ஆவரங்கால் மத்திய பகுதி மைதானத்துக்கு அருகில் காணி விற்பனைக்கு உண்டு.

074 099 2204

## காணி வாடகைக்கு குத்தகைக்கு

யாழ்ப்பாணம் பலாலிவீதி, கந்தர் மடம் சந்தியிலிருந்து (Damro Showroom) பின்னால்) 100m அமைதியான நடை தூரத்தில் களஞ்சியம் / தனியார் வகுப்பு மற்றும் வேண்டிய தொழில் நடத்தக் கூடிய காணி. (தனிப் பாதை, கிணறு, சுற்றுமதிலுடன் 1 1/2 பரப்புக் காணி)

076 987 0346
078 567 9674

## மணமகன் தேவை

1994, யாழ். இந்து, உத்தரம், HR Manager, மானிப்பாய், Divorced மணமகள் பதிவு # 7945. தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே தற்போதைய பதிவுகளுக்கு 50% கழிவு. www.EQMarriage Service.com இணையவழி திருமணசேவை பம்பலப்பிட்டி, கொழும்பு 04. (CS 24993)AH-1

076 664 9401

## மணமகள் தேவை

1992, யாழ். இந்து, விசாகம், Accountant, Canada, மணமகன் பதிவு #9142. தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. தற்போதைய பதிவுகளுக்கு 50% கழிவு. www.EQMarriage Service.com இணையவழி திருமணசேவை பம்பலப்பிட்டி, கொழும்பு 04. (CS 24994) AH-1

076 664 9401

## காணி விற்பனைக்கு

அல்வாய் கிழக்கில் மாலி சந்தியிலிருந்து 400 மீற்றர் தூரத்தில் 17 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
பிற்பகல் 4.00 - 7.00 வரை (CS 25790)AH-1

077 553 7349

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

சங்கத்தானை, சாவகச்சேரி. 077 858 1486

## கடைகள் வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கடைகள் வாடகைக்கு உண்டு. அலுவலக பாவனைக்கும் ஏற்றது.

077 162 0626

## வீடு வாடகைக்கு தேவை

அரச உத்தியோகத்தர், சிறிய குடும்பம் (4) யாழ்நகரில் இருந்து 7 km சுற்றுவட்டத்தில் வீடு தேவை.

T.P.: 077 728 3692

## மணமகள் தேவை

1993, யாழ். கிறிஸ்தவம், திருவாதிரை, Doctor, யாழ்ப்பாணம். மணமகன் பதிவு #9406. தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. தற்போதைய பதிவுகளுக்கு 50% கழிவு. www.EQMarriage Service.com இணையவழி திருமணசேவை பம்பலப்பிட்டி, கொழும்பு 04. (CS 24994) AH-1

076 664 9401

## தேவை

தெஹிவளையில் படுக்கையிலுள்ள வயோதிப தாயாரை வீட்டில் தங்கியிருந்து மகள் போல் பார்த்துக்கொள்வதற்கு அன்பும் பொறுமையும் கொண்ட பெண்ணொருவர் தேவை.

077 433 4445 (CS/24995) AH-1

## காணி விற்பனைக்கு

இராசவீதி, கல்வியங்காடு கோப்பாய் பொலிஸ் நிலையத்திலிருந்து 50 m தொலைவில் 2 பரப்பு 2.94 குளி, உடைய காணி விற்பனைக்குண்டு.

074 197 2649

## விற்பனைக்குண்டு

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குட்பட்ட ஆறுகால் மடத்தடியில் 4 1/2 பரப்பு உறுதிக்காணி விற்பனைக்குண்டு. தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.

076 664 2970
077 933 6793

## வேலை வெற்றிடம் தொடர்பானது

**கணித பாடம் தரம் 6 -11 வரை**
**கணக்கீடு**
**தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்**
**(ICT English Medium)**

கற்பிப்பதற்குத் தகுதியான பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம்

**இடம்:- உடுவில் மகளிர் கல்லூரி**
**காலம் : 09.08.2023 - 10.08.2023**
**நேரம் : காலை 8.30 - மதியம் 1.00**

**- Principal**

CR/40356)AH-1


# மரண அறிவித்தல்

## கந்தசாமி செங்கமலம்



மலர்வு 08.08.1942
உதிர்வு 04.08.2023

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், இலக்கம் 52/2, 2ம் பகுதி, திருவையாறு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி செங்கமலம் கடந்த (04.08.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும், ஸ்ரீதரன் (கனடா), துர்க்காதேவி (திருவையாறு) ஆகியோரின் அன்புத் தாயாரும், மல்லிகாதேவி (கனடா), சசிதரன் (கிளி/ மத்திய கல்லூரி ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கீர்த்தன் (கனடா), விஜேர்த்தன் (கனடா), நிருஜா (கனடா), கோபிஷா (மாணவி - கிளி/ மத்திய கல்லூரி), கேசிகன் (மாணவன் - கிளி/ திருவையாறு மகாவித்தியாலயம்) ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற சிவராசா மற்றும் கமலாதேவி (கனடா), திலகவதி (இராமநாதபுரம்), மகாலட்சுமி (இராமநாதபுரம்) ஆகியோரின் சகோதரியும், ஜெகசோதி (இராமநாதபுரம்), காலஞ்சென்றவர்களான தியாகராசா, இலட்சுமிகாந்தன் மற்றும் மயில்வாகனம் (இராமநாதபுரம்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இரணைமடு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 364 1405, 077 054 5346

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
21 . 08 . 1944



மறைவு
23 . 07 . 2023

கடந்த (23.07.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

## அமரர்
## இராசேந்திரம் திருக்கேஸ்வரி

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியை நாளை **(07.08.2023) திங்கட்கிழமை** காலை 6.00 மணியளவில் **கீரிமலை புனித தீர்த்தக்கரையில்** நடைபெறும். அதனைத் தொடர்ந்து **அன்னாரின் இல்லத்தில்** நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**மாதனை, பருத்தித்துறை.**

**குடும்பத்தினர்.**
**077 224 7874**

(CS 25856)A-1

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **நுணாவில் பகுதியில்**
**10 பரப்புக் காணி** விற்பனைக்குண்டு.

## நிலப்பரப்பு

- ✔ நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேறாக்கன்னி கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் உள்ளது.
- ✔ 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✔ குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- ✔ நன்னீர் ஊற்று சூழல்
- ✔ ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 14 லட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 12 லட்சம் வரையும் உள்ளது.
- ✔ பார்வையிடும் நேரம்:
  காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**தொடர்புகளுக்கு - ஜெயம்**

**077 8147 389**
**077 9865 457**

# மரண அறிவித்தல்

பிறப்பு
25 . 11 . 1959



இறப்பு
03 . 08 . 2023

## ஜெகசீலன் இராசமலர்

பத்தமேனி அச்சுவேலியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகசீலன் இராசமலர் அவர்கள் கடந்த (03.08.2023) அன்று காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அசுபதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ஜெகசீலன் அவர்களின் அன்பு மனைவியும், தாரணியின் பாசமிகு தாயும், விஜிதர் அவர்களின் மாமியும், யதுன், திவாஷி, ஹரிஷாந் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், உலகநாதன், அமரர் ஜெகநாதன், அமரர் சச்சிதானந்தம், சர்வகுலநாதன், குலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் குணசீலன், சத்தியசீலன், அமரர் இந்திராதேவி, சுமத்திராதேவி, வசந்திராதேவி, நித்தியானந்ததேவி, சிவகுமாரி, சறோஜினிதேவி, தாரணி ஆகியோரின் மைத்துனியும், தமிழ்கவி, பிரசாந், சிந்துயன், சூர்யா, பானுஜா, தயாளசோபன், நிறோஷனா, சாரங்கா, சோசிகா, கௌசிகா, யசிதர், ஜீவன், செந்தில், கார்த்திகா, உமாதேவி, பாமாதேவி, லதாதேவி, இந்திரகுமார், இராசகுமார், கானுஜன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தீர்த்தாங்குளம், உல்லிவிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

மண்ணில்
08 . 02 . 1946



விண்ணில்
03 . 08 . 2023

## அந்தோனிப்பிள்ளை பிலிப் (சின்ராசா)

குருநகரை பிறப்பிடமாகவும் பாஷையூரை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை பிலிப் (சின்ராசா) அவர்கள் கடந்த (03.08.2023) வியாழக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை றோசம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பிரபு திரேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், பிரான்சிஸ்கா (அன்னமலர்) அவர்களின் பாசமிகு கணவரும், லக்ஸ்மாலா (ஆசிரியர் - யா/ பாஷையூர் சென் அன்ரனிஸ் றோ.க.ம.வித்தியாலயம்), பிறியோலா (கனடா), றொபினா றெனோலா (பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை), றெக்சலா (ஆசிரியர், யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அல்போன்ஸ் (உள்ளூராட்சி அமைச்சு, வடக்கு மாகாணம்), றாஜ்குமார் (கனடா), பெலிக்ஸ், ஜெயக்குமார் (மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெலா, லக்ஷிகன், வலன்ரீனா, அன்றீனா, ஜோயல், தரணிகா, ஜெஷானா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான லில்லி, சேவியர் மற்றும் ஜேம்ஸ், றோஸ், காலஞ்சென்றவரான ஜோசேப் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அலோசியஸ், நவமணி மற்றும் நாகம்மா, காலஞ்சென்ற தவரெட்ணம் மற்றும் ராணி, செபஸ்ரீனா காலஞ்சென்ற றொபேட் ஆகியோரின் மைத்துனரும், உதயகாந்தராஜா, பிறேமா ஆகியோரின் சகலரும், அலெக்சாண்டர் மற்றும் ராணி, பபி, Dr.திருமாறன், ரதிமதி, Dr.மதிமாறன், Dr.டீன் ஜெனிபேட், டீன் ஒஸ்பேட், சாந்தனா, ஏஞ்சலின் ஆகியோரின் மாமனாரும், ராஜன், காலஞ்சென்றவர்களான நிர்மலா, பாபு மற்றும் கலா, ஜொய்லா, கொன்சி, மேசி, ஜோன்சன், ஜொய்சி, யான்சி, சபினா ஆகியோரின் சிறிய தந்தையும், ரவி, ஜீன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நாளை (07.08.2023) திங்கட்கிழமை பி.ப 3.30 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.50, 3ம் குறுக்குத்தெரு,**
**பாசையூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 25852) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெல். துர்க்காதேவி மஹோற்சவம் விசேட ஏற்பாடுகள் அறிவிப்பு!

**யாழ்ப்பாணம், ஓக. 6**

**வரலாற்றுச் சிறப்புமிக்க தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், ஆலய உற்சவத்தை சிறப்புற நடத்துவதற்குரிய சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலர் தலைமையில் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் உட்பட்ட ஆலய பிரதிநிதிகள் பங்கேற்பில் இடம்பெற்ற முன்னெடுக்கப்பட்ட கூட்டத்தில் இந்தவிடயம் கலந்துரையாப்பட்டது.**

இதுதொடர்பில் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்ட செய்திக் குறிப்பில் உள்ளதாவது:

உற்சவம் நடைபெறும் சகல தினங்களும் அடியவர்களுக்கு எந்தவித குறைவின்றி சுகாதார நடைமுறைகள் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டு அன்னதானம் வழங்கப்படும்.

அடியவர்களின் நன்மை கருதி ஆலய வளாகத்தில் குடிதண்ணீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டு குடிதண்ணீர் விநியோகிக்கப்படும். சுகாதாரத் துறையினரால் தினமும் பரிசோதிக்கப்பட்டு குடிதண்ணீரின் தரம் உறுதிப்படுத்தப்படும். பல பிரதேசங்களில் இருந்தும் ஆலயத்துக்கு வரும் அடியவர்களின் நன்மை கருதி பல விசேட பேருந்துகள் இயக்கப்படும்.

இரவு 8 மணிக்கு விசேட பேருந்து சேவை ஒன்றை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வலி. வடக்கு பிரதேசசபையினரின் அனுமதிக்கப்பட்ட கட்டணங்களின் வாகனத் தரிப்பிடங்கள் அமைக்கப்படும்.

பக்தர்களின் பாதுகாப்புக்கென ஆலய வளாகத்தில் விசேட பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டு பொலிஸார் 24 மணி நேரமும் கடமையில் ஈடுபடுவர். அத்துடன் நடமாடும் சுகாதார சேவை ஏற்படுத்தப்படும்.

அடியவர்களுக்கு ஏதேனும் உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் சாரணியர்கள் முழு நேர சேவையை வழங்கவுள்ளனர்.

தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கு வலி.வடக்குப் பிரதேசசபையினரிடம் உரிய வியாபார அனுமதி பெறப்படல் வேண்டும்.

உணவுப் பொருள்களை கையாளும் வியாபாரிகள் சுகாதாரத் துறையினரால் வழங்கப்படும் மருத்துவச் சான்றிதழைக் கட்டாயமாக கொண்டிருக்கவேண்டும். உற்சவ காலத்தில் தேங்கும் கழிவுப் பொருள்களை உடனுக்குடன் அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தின் பிரதான வாயிற் கோபுரத்தின் எதிர்ப் பக்க வீதியோரத்தில் எந்தவித வாகனங்களும் நிறுத்து வதற்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்கள் அனைவரும் ஆலயத்துக்கும் ஆன்மீகத்துக்கும் பொருத்தமான ஆடைகளை அணிந்து ஆசாரசீலர்களாக ஆலயத்துக்கு வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ச)

# வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஓக.6

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள கொழும்புத்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான இலவச விலங்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றல் மாநகரசபை சுகாதார மருத்துவ பணிமனையினால் முன்னெடுக்கப்படவுள்ளது. ஒரு நாய்க்கான உரிமக் கட்டணமாக ரூ.50 அறவிடப்படும்.

எனவே இந்தச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது கீழ்க் குறிப்பிடப்படும் நாள்களில் குறிப்பிட்ட இடங்களில் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு நடைபெறவுள்ளது. (ய)

| | |
|---|---|
| 07.08.2023 – திங்கட்கிழமை | |
| மு.ப. 9 – 11 | நெடுங்குளம் தாய்மார் கழகம் |
| மு.ப. 11 – 1 | வசந்தபுரம் சி.சி. சனசமூக நிலையம் |
| பி.ப. 2.30 – 4 | கொலன் தோட்டம் |
| 08.08.2023 – செவ்வாய்க்கிழமை | |
| மு.ப. 9 – 11 | 3ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை |
| மு.ப. 11 – 1 | 1ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை |
| பி.ப. 2.30 – 4 | 2ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை |
| 09.08.2023 – புதன்கிழமை | |
| மு.ப. 9 – 11 | எழிலூர் சனசமூக நிலையம் |
| மு.ப. 11 – 1 | 5ஆம் குறுக்குத்தெரு கொழும்புத்துறை |
| பி.ப. 2.30 – 4 | சுவாமியார் வீதி, சிகிச்சை நிலையம் |
| 10.08.2023 – வியாழக்கிழமை | |
| மு.ப. 9 – 11 | மகேந்திரபுரம் |
| மு.ப. 11 – 1 | வளன்புரம் |
| பி.ப. 2.30– 4 | சென்.மேரிஸ் கோயில் (ஏ.வி. வீதி) |
| 11.08.2023 – வெள்ளிக்கிழமை | |
| மு.ப. 9 – 11 | ஏ.வி. வீதி புகையிரத வீதி சந்தி |
| மு.ப. 11 – 1 | கொழும்புத்துறை விதானையார் லேன் |
| பி.ப. 2.30 – 4 | பாசையூர் சனசமூக நிலையம் |
| 14.08.2023 – திங்கட்கிழமை | |
| மு.ப. 9 – 11 | ஈச்சமோட்டை சனசமூக நிலையம் பாசையூர் |
| மு.ப. 11 – 1 | புதுக்குடியிருப்பு |
| பி.ப. 2.30 – 4 | பாண்டியன் தாழ்வு (புனித அன்னமாள் கோயில் அருகில்) |
| 15.08.2023 – செவ்வாய்க்கிழமை | |
| மு.ப. 9 – 11 | வில்வந்தெரு |
| மு.ப. 11 – 1 | புளியடிச் சந்தி இலந்தைக்குளம் |
| பி.ப. 2.30 – 4 | கொய்யாத் தோட்டம் சனசமூக நிலையம் |
| 16.08.2023 – புதன்கிழமை | |
| மு.ப. 9 – 11 | விதானையார் லேன் ஈச்சமோட்டை |
| மு.ப. 11 – 1 | பாசையூர் மகப்பேற்று நிலையம் |
| பி.ப. 2.30 – 4 | சுண்டிக்குளம் சனசமூக நிலையம் |






# இந்தியாவில் உயர்கல்வி: யாழ்.மாணவர்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக. 6

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 12 மாணவர்கள் மற்றும் கல்வியியலாளர்கள் ஆகியோர் இந்தியப் பல்கலைக்கழகங்களில் முதுகலை மற்றும் முனைவர் பட்டங்களைத் தொடர வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இந்திய கலாசார உறவுகளுக்கான உதவித்தொகைக்குத் தகுதி பெற்றுள்ளனர். அந்தவகையில், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் தெரிவாகிய மாணவர்களை இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் கடந்த வியாழக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார். (ச-ரி-20)

## ஹெரோய்ன் வியாபாரம்

# கைதாகிய மனைவி மீது கணவன் சரமாரித் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக. 6

உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுடன் மனைவி கைதுசெய்யப்பட்ட நிலையில் பொலிஸ் நிலையம் புகுந்த கணவன், மனைவியை சரமாரியாகத் தாக்கியுள்ளார். அதனையடுத்து அவரையும் சிறைப்படுத்தியுள்ளனர் பொலிஸார். நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கிடைத்த தகவலுக்கமைய யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் குறித்த பெண் ஆனைக்கோட்டைப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட் [illegible]மிருந்து 80 மில்லி கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது. இவர் நீண்டகாலமாக ஆனைக்கோட்டைப் பகுதியில் ஹெரோய்ன் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தமை பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. இந்தநிலையில் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து சந்தேகநபரை விசாரணைக் குட்படுத்தியபோது அந்த இடத்துக்கு வந்த அவரது கணவர் மனைவி மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தியுள்ளார். பொலிஸார் அவரைக் கட்டுப்படுத்தி சிறைப்படுத்தியுள்ளனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்தும் நன்றி நவில்லும்




## திருமதி தர்மதேவி மனோகரன்
**BA, PGDE, SLTS-1**

அவர்கள் 01.08.2023 அன்று தனது அறுபதாவது அகவையில் 39 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்றமையினை இட்டு வாழ்த்தி வணங்குகின்றோம்.

ஆறுமுதல் அறுபது வரை அயராது தம் ஆசிரியப் பணியை மகிமை குன்றாது செவ்வனே செய்ததோடு மட்டுமன்றி குடும்ப நலனும் இல்லற அறமும் காத்து அன்பால் ஆட்சிசெய்த தூய நல் இதயத்திற்கும் மாசற்ற அகத்தால் முகத்திற் புன்னகையுடன் அரவணைக்கும் நல்லாள் என்றும் நிறைந்து உயர்ந்து வாழ இறையாசி வேண்டுகின்றோம்.

**சேவைக்காலம்**

| | |
|---|---|
| முதல் நியமனம் 05.08.1984 | |
| க/பன்வில விக்னேஸ்வரா தமிழ் மகாவித்தியாலயம் | - 05.08.1984 - 03.03.1987 |
| கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை | - 09.03.1987 - 31.12.1988 |
| க/கலஹா தமிழ் மகா வித்தியாலயம் | - 01.01.1989 - 31.12.1991 |
| யா/வயாவிளான் மத்திய கல்லூரி | - 01.01.1992 - 21.01.2014 |
| யா/இணுவில் இந்துக் கல்லூரி | - 22.01.2014 - 31.07.2023 |

மேற்படி அவரது இல்லத்தில் 01.08.2023 அன்று இடம்பெற்ற பிறந்தநாள் நிகழ்வுகளிலும் 03.08.2023 அன்று யா/இணுவில் இந்துக் கல்லூரி சமூகத்தினரால் சிறப்புற ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்பட்ட மணிவிழா நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பித்தோர், கௌரவித்தோர், வாழ்த்தியோர், தொலைபேசி மூலமாக வாழ்த்துகளைப் பகிர்ந்தோர் அனைவருக்கும் இத் தருணத்தில் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
**குடும்பத்தினர்.**

(CR 40367) A-1


## சங்கமித்தை...

எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் நேற்றுமாலை சங்கானை பேருந்து நிலையத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

'சங்கமித்தை வரவுமில்லை அரச மரம் நடவுமில்லை', 'பொய்யான வர்த்தமானியை இரத்துச் செய்', 'இந்த மண் எங்களின் சொந்த மண்', 'வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம்', 'பறாளாய் முருகன் தமிழர் சொத்து', 'தாயகத்தில் ஆக்கிரமிப்பு சர்வகட்சிக் கூட்டத்தில் நல்லிணக்க நாடகம்', 'இராணுவமே வெளியேறு' என்று கோஷம் எழுப்பியவாறும் பதாகைகளைத் தாங்கிப் பிடித்தவாறும் சுமார் ஒரு மணிநேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அந்தக் கட்சியின் பொதுச் செயலர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் ஆதரவாளர்கள், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றனர். (அ-ஓ.27)

## கப் வாகனம்...

சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் உயிரிழந்துள்ளார்.

அக்கராயனைச் சேர்ந்த வேலு செல்வகுமார் (வயது - 40) என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியிலிருந்து அக்கராயன் நோக்கிப் பயணித்த கப்ரக வாகனமும் அக்கராயனிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் அவர் அங்கு உயிரிழந்துள்ளார். கப் வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஓ.113)

## விபத்தில்...



கலைக்கழகக் கல்லூரி மாணவன் உயிரிழந்துள்ளான்.

நுவரெலியாவைச் சேர்ந்த கறுப்பையா பிரதீசன் (வயது - 22) என்ற மாணவனே நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளான். கடந்த 3ஆம் திகதி இந்த விபத்து இடம்பெற்றது.

நாவலர் வீதியின் ஊடாகப் பயணித்து ஆனைப்பந்திச் சந்திக்குச் சென்ற மோட்டார் சைக்கிளில் மாணவனும் இன்னுமொருவரும் பயணித்துள்ளனர். இதே வேளை - நல்லூரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த வாகனத்துடன் ஆனைப்பந்திச் சந்தியில் மோட்டார் சைக்கிள் மோதுண்டுள்ளது. சம்பவத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற பிரதீசன் படுகாயங்களுக்குள்ளாகி மயக்கமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை 5.10 மணியளவில் அவர் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் நேற்று மேற்கொண்டார். (அ-ஓ.26)


**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் உணவகத்திற்கு ரொட்டி வேலை, கொத்து, றைஸ் போடத் தெரிந்தவர்கள் தேவை.

**077 5073 484**



# மரண அறிவித்தல்

பிறப்பு 12.12.1951



இறப்பு 05.08.2023

## சின்னத்தம்பி வாமதேவன்

மீசாலை கிழக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும் நுணாவில் மத்தியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வாமதேவன் நேற்று (05.08.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை குஞ்சம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற செல்வராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, புவனேஸ்வரி, திருச்செல்வம் மற்றும் தங்கவடிவேல் சறோயினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கஜன் (லண்டன்), கரன் (சாவகச்சேரி ஆட்டோ சங்கத் தலைவர்), கபிலன் (இத்தாலி), கதீஸ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலா, நிர்மலா, அனிதா, பிறேமலதா ஆகியோரின் மாமனாரும், லிதியா, லைசா, லக்ஷியா, லியோ (லண்டன்), மதுஷா, கிருஜா, லக்ஸன், கனிஸ்ரன், கபிஷன், அபிஷன், றேஸ்மியா, ஸ்வீற்றி, பிரவீன், ஸ்வின் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 1.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 1140 107, 077 2055 645**
**(மகன்) - தவராஜன் (கரன்)**

**நுணாவில் மத்தி,**
**சாவகச்சேரி.**



# மரண அறிவித்தல்

தோற்றம் 06.05.1941



மறைவு 05.08.2023

## திருக்கேதாரம் சிவராசா

**(ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர், வலயக் கல்வி அலுவலகம் - வடமராட்சி)**

தும்பளை தங்காலய வீதியைப் பிறப்பிடமாகவும் தாமர் ஒழுங்கை புலோலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருக்கேதாரம் சிவராசா அவர்கள் நேற்று (05.08.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லாச்சியின் அன்புக் கணவரும், தமயந்தியின் (யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தி.) அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான தவராசா, ஜெயராசா, அருந்தவராசா, லோகநாயகி மற்றும் ஜெயநாயகி, தவமணி தேவி, விமலநாயகி, சின்னத்தம்பி ஆகியோரின் சகோதரரும், அமரர்களான நீலாயதாட்சி, இரத்தினகோபால், விஜயலக்சுமி, குபேரச்சந்திரன், சிறீறங்கநாயகி, ரவிச்சந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோரியடி இந்து மயனத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தாமர் ஒழுங்கை,**
**புலோலி வடக்கு, பருத்தித்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 25864) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆளுநரால் அரசியல் தலையீடு

## இலங்கை ஆசிரியர் சங்கத்தின் குற்றச்சாட்டை ஆளுநர் மறுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 6

அரசியல்வாதிகளின் கடிதங்களுக்கெல்லாம் வடமாகாண ஆளுநர் இடமாற்றங்களை வழங்க உத்தரவிடுவதும், இடமாற்றச்சபையின் தீர்மானங்களை புறந்தள்ளிச் செயற்படுவதும் கல்வி தொடர்பான சுற்றறிக்கைகளை மீறிய செயலாகும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் திலீசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வட மாகாண ஆளுநர் அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்தவும், தனது தனிப்பட்ட அரசியல் நலன்களுக்காகவும் முறையற்றவகையில் செயற்படுவது வடமாகாணக் கல்வியை சீரழிக்கத் துணைபோகும் செயற்பாடாகும். வடமாகாண ஆளுநரின் இத்தகைய அருவருப்பான செயற்பாட்டை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இந்த முறையற்ற செயற்பாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் வடமாகாணக் கல்வியமைச்சும், வடமாகாண கல்வித் திணைக்களமும் ஆளுநருக்கு அவரது தவறுகளைச் சுட்டிக்காட்டி வடமாகாணக் கல்வியில் அரசியல் தலையீட்டை நிறுத்த முன்வரவேண்டும் - என்றுள்ளது.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரைத் தொடர்புகொண்டு கேட்டபோது; இந்தக் குற்றச்சாட்டை முற்றிலுமாக மறுக்கின்றேன். இவ்வாறான தொரு குற்றச்சாட்டை முன்வைக்க முன்னர் இலங்கை ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் என்னுடன் தொடர்பு கொண்டு எனது தரப்பு விளக்கத்தையும் கேட்கவில்லை. நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசியல்வாதிகளின் கோரிக்கையை ஏற்று எந்தவொரு இடமாற்றத்தையும் மேற்கொள்ளவில்லை - என்றார். (ஒ.27,26)

### லக்சுமி...

ஜேர்மன் தொல்பொருள் நிறுவனத்தின் தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவுக்கான ஆராய்ச்சி இணைப்பாளர், இலங்கையின் புதிய கூட்டுத் திட்ட இணைப்பாளர் கலாநிதி அரெய்ன் டி சாக்சே, கலாநிதி நிமால் பெரேரா, இலங்கை தொல்லியல் திணைக்கள முன்னாள் உதவிப் பணிப்பாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தொல்லியல்துறை விரிவுரையாளர்கள்மற்றும்மாணவர்கள்இணைந்து இந்த அகழ்வுப் பணியை ஒரு மாத காலமாக முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையிலேயே கி.பி. முதலாம் நூற்றாண்டுக்கும் மூன்றாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்டதாக இருக்கலாம் என்று நம்பப்படும் லக்சுமி உருவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் ஐந்தும், ரோம நாணயங்கள் சிலவும் கடந்த வாரம் மீட்கப்பட்டுள்ளன.

கந்தரோடையில் விகாரையே இருந்தது என்று இலங்கை தொல்லியல் திணைக்களம் கூறி வந்த நிலையில் அந்தப் பகுதியிலிருந்து இந்து தெய்வத்தின் உருவம் பொறிக்கப்பட்ட நாணயங்கள் மீட்கப்பட்டுள்ளன.

1917ஆம் ஆண்டு கந்தரோடையில் களவாய்வை மேற்கொண்ட 'போல் பீரிஸ்' இவ்வகை நாணயங்களைக் கண்டுபிடித்து அதில் உள்ள பெண் உருவம் தாமரை மலரில் நிற்பது போல் பொறிக்கப்பட்டுள்ளதை ஆதாரமாகக் காட்டி அதற்கு லக்சுமி நாணயம் என முதன் முதலாகப் பெயரிட்டிருந்தார். அவரால் இடப்பட்ட பெயரே இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகின்றது. யாழ்ப்பாணக் கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் மேலாய்விலும் இவ்வகை நாணயங்கள் கிடைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.125)

### குருந்தூர்மலைக்கு...

நூலொன்று வெளியிடப்படவுள்ளது.

கி.மு. முதலாம் நூற்றாண்டில் கல்லாட நாக அரசனால் உருவாக்கப்பட்ட, முல்லைத்தீவு, நாகசோலையில் அமைந்துள்ள குருந்தி விகாரைக் கட்டடத்தின் சகல தகவல்களையும் உள்ளடக்கிய வகையில், ஐந்து பல்கலைக்கழக நிபுணர்களின் ஆய்வுகளைத் தொடர்ந்தே இந்த நூலை வெளியிடவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

இந்த நூல் நாளை திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு கொழும்பு, துன்முல்ல சந்தியிலுள்ள சிறி சம்புத்தத்வ ஜயந்தி மாளிகையில் வெளியிடப்படவுள்ளது. (அ-ஒ.இ)

### புது அரசமைப்பு...

முடிவு எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் கட்சித் தலைவர்களிடம் 13ஆவது திருத்தம் தொடர்பில் யோசனைகளை முன்வைக்குமாறு ஜனாதிபதியின் செயலரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனிடம் கேட்டபோது, நாம் புதிய அரசமைப்புத் தொடர்பிலேயே யோசனையை முன்வைப்போம் என்று பதிலளித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் கேட்டபோது, 13ஆவது திருத்தத்தை நிராகரிப்பதற்கான காரணங்களைக் குறிப்பிடுவதுடன், கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்காக ரொமேஷ் டி சில்வா தலைமையில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவிடம் கையளித்த அரசியல் தீர்வு திட்ட யோசனையை முன்வைப்போம் - என்றார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனிடம் கேட்டபோது, அவர்கள் எவ்வாறான பரிந்துரைகளை எதிர்பார்க்கின்றார்கள் என்பதில் தெளிவில்லாமல் உள்ளது. நாம் ஏற்கனவே இடைக்காலசபை தொடர்பான யோசனைகளை முன்வைத்துளோம். அவர்கள் எதை எதிர்பார்க்கின்றார்கள் என்பது தெளிவானால் மேலதிகமான விடயங்களை முன்வைப்போம் - என்றார்.

ஜனநாயக தமிழ்த் தேசியக்கூட்டணியின் இணைத் தலைவர் த.சித்தார்த்தனிடம் கேட்டபோது, இந்தியப் பிரதமர் மோடியிடமும் 13ஐ முழுமையாக - 1987ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டபோது இருந்தவாறு நடைமுறைப்படுத்துமாறு கோரியிருந்தோம். எனவே 13 ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறுதான் நாங்கள் பரிந்துரைகளைச் சமர்ப்பிப்போம் - என்றார். (அ-ஒ.5 125)

### ரயில்...

2.15 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்தது. அரியாலை, நெடுங்குளத்தைச் சேர்ந்த திலீபன் ஈழப்பிரியா (வயது - 27) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். ரயிலில் பாய்ந்து உயிர்மாய்த்த பெண் ஒன்றரை வயதுடைய குழந்தையொன்றின் தாயார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ.இ)

### முகமூடிக்...

இந்தக் கும்பலே பருத்தித்துறை நகரை அச்சுறுத்தி வந்ததாகப் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

காங்கேசன்துறைப் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகரின் ஆலோசனையின் கீழ் பிராந்திய குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி மதுரங்க தலைமையிலான குழுவினரால் இந்தக் கும்பலைச் சேர்ந்த இருவர் கைதாகியுள்ளனர்.

2021ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி பருத்தித்துறை, அல்வாய் பகுதியில் நகை, பணம் மற்றும் தொலைபேசிகளை இந்தக் கும்பல் கொள்ளையடித்ததாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது. முகமூடி அணிந்து இந்தக் கும்பல் பருத்தித்துறையில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

மூன்று பேர் கொண்ட இந்தக் கும்பலைச் சேர்ந்த இருவர் கைதாகியுள்ள நிலையில் தப்பியோடிய மற்றைய சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறுகின்றனர். (அ-ஒ.23)

### சிங்கள...

பொலிஸாரிடம் நேற்று ஒப்படைத்துள்ளனர்.

தண்ணிமுறிப்புக் குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட தண்ணிமுறிப்பு மக்களுக்கும், ஹிச்சிராபுரம் மக்களுக்குமே அனுமதி உள்ள நிலையில் வெலிஓயா பகுதியிலிருந்து சிங்கள மீனவர்கள் தொடர்ச்சியாக அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

இவர்களின் இவ்வாறான நடவடிக்கையால் குளத்தில் உள்ள மீன்வளங்கள் முற்றாக அழிவடைந்துள்ளன என உள்ளூர் மீனவர்கள் குறிப்பிட்டனர். இந்த அத்துமீறிய நடவடிக்கை தொடர்பில் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுசென்றபோதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் தண்ணிமுறிப்புக் குளத்தில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட சிங்கள மீனவர்களையும், மீன்பிடிக்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் குளத்தில் தொழில் செய்யும் மக்கள் நேற்றுப் பிடித்து, பறிமுதல் செய்துள்ளனர்.

இவ்வாறு பிடிக்கப்பட்டவர்களில் 29 சிங்கள மீனவர்களும் அவர்கள் கொண்டு வந்த 6 வலைகள், 20 மிதக்கும் ரியூப்புகள் என்பன ஒட்டுசுட்டான் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (அ-ஒ.19)

### அரசின்...

எதிர்ப்புத் தெரிவித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்றுக் காலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சுழிபுரம் சந்தியில் ஆரம்பமான இந்தப் போராட்டம் பேரணியாக பறாளாய் முருகன் ஆலயத்தைச் சென்றடைந்தது. இந்தப் போராட்டத்தில் பெருமளவான பல்கலைக்கழக மாணவர்கள், சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கலந்து கொண்டனர். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனும் பங்கேற்றார்.

'இந்த மண் எங்களின் சொந்த மண்', "மண் துறந்த புத்தருக்கு மண் மீது ஆசையா?", "இனப்படுகொலை இராணுவமே வெளியேறு", "தொல்லியல் திணைக்களமே வெளியேறு", "பறாளாய் எங்கள் சொத்து", "குருந்தூர் மலை எங்கள் சொத்து", "கீரிமலை எங்கள் சொத்து", "மயிலத்த மடு எங்கள் சொத்து, வெடுக்குநாறி மலை எங்கள் சொத்து' என்ற பதாகைகளை ஏந்தியவாறு கோஷமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டதுடன் பேரணியாகவும் சென்றனர். (அ-ஒ.ச-27)

**காணி விற்பனைக்கு**

கல்வியங்காட்டில் நல்ல சுற்றாடலில் 1 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

077 781 3417

**வாடகைக்கு**

இல.27, ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்.

(கடை வாடகைக்குண்டு)

075 803 9586

**காணி விற்பனைக்கு**

* யாழ்ப்பாணம் புத்தூர் மெயின் றோட்டில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்.
* குடியிருப்பு சூழ உள்ள காணி
* நன்னீர் ஊற்று
* 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.

தொடர்புகளுக்கு: 076 057 0354
076 826 0354

(CS 25774) A-1

**காணி விற்பனைக்கு**

* யாழ்ப்பாணம் கல்வியங்காடு 21 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. நிலப்பரப்பு
* புதிய செம்மணி வீதி.
* 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம்.

தொடர்புகளுக்கு:
076 788 0591

(CS 25774B) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வணிக நிலையத்துக்குப் பொதி செய்வதற்கும். Delivery செய்வதற்கும் வேலையாள்கள் தேவை.
ஆர்வமுள்ளவர்கள் திங்கள் தொடக்கம் வெள்ளி வரை சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

**077 419 5015**

(CS/25781)AH-1

## குத்தகைக்கு / விற்பனைக்கு

புதிய **JCP** (மகேந்திரா) குத்தகைக்கு அல்லது விற்பனைக்கு உண்டு.

**077 016 5913, 077 103 8751**

(CS/51511)AH

## Lovely Flower Shop

Main Street Jaffna இல் உள்ள கடை ஒன்றுக்குப் பணியாளர் (பெண்) தேவை.

(CS/51524 AH-1

**074 288 5023**

## வேலையாள் தேவை

சாவகச்சேரியில் இயங்கும் பிரபல வர்த்தக நிலையம் ஒன்றுக்கு ஆண்/பெண் வேலையாட்கள் தேவை
அடிப்படைச் சம்பளம் ரூபா 25000/-
உணவும் வழங்கப்படும்.

**077 920 8558**

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

**யாழ் நகரில் தனி வகுப்பு**
**G.C.E O/L, A/L, பட்டதாரிகள் தொழில்புரிபவர் ஆர்வமுள்ளவர்களுக்கு**

K.Ganesh B.A **077 766 8725**


## Lovely Flower Shop

Main Street Jaffna இல் உள்ள கடை ஒன்றுக்குப் பணியாளர் (பெண்) தேவை.

(CS/51524 AH-1

**074 288 5023**


## தேவை

சைவ உணவத்திற்கு சமையல், ரொட்டி, ரீ மேக்கர் சப்ளயர் மற்றும் ஏனைய வேலைகளுக்கு ஆள்கள் தேவை. ஆனைக்கோட்டை

**077 055 6949**

## வீட்டுப் பணிப்பெண் தேவை

தெல்லிப்பளையில் உள்ள வீடொன்றிற்கு தங்கியிருந்து வேலை செய்ய பணிப்பெண் ஒருவர் தேவை.

**T.P.: 077 400 5023**

## விற்பனை பிரதிநிதி தேவை

**யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு மொத்த வியாபார நிலையம்** ஒன்றிற்கு அனுபவம் உள்ள விற்பனை பிரதிநிதி தேவை.
வேலை நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

**தொடர்புகளுக்கு- 076 119 0267**

தொடர்புகொள்ளவேண்டிய நேரம்:
**காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை**

(cs/51521) (N-1)

## குதூகல ஆரம்பம்

அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கல்யாண மண்டபம் ஆவணி மாதத்தில் ஆரம்பமாக இருப்பதால் ஆவணி மாத முகூர்த்த நாட்களுக்கான திருமணங்கள் பதிவு செய்யப்படுகின்றது. உங்கள் பிள்ளைகளின் திருமணத்தைப் பதிவு செய்ய விரும்புபவர்கள் நேரடியாக மண்டபத்துக்கு வருகை தரும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

**உரிமையாளர்கள் மற்றும் முகாமையாளர்.**

(CS/51529)AH-

## கட்டடம் வாடகைக்கு

206/2, ஸ்ரான்லி றோட்டில் 2300 சதுர அடி கொண்ட **CDB Bank** ற்கு மேல் அமைந்துள்ள கட்டடம் வாடகைக்குண்டு.

தொடர்பு: **077 360 9005**

## வேலையாட்கள் தேவை

யாழில் இயங்கும் போட்டோ கொப்பி, புத்தகக் கடைக்கு அனுபவமுள்ள / அனுபவமற்ற ஊழியர்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

**076 832 3682**

## English Class

**English Literature for G.C.E.(O/L)**
(Limited Numbers)

**Spoken English and Grammar**
Easiest Method to learn and Quickest way to Pick Up.

**IELTS (London Exam)**
Academic and General.

IELTS ( Life Skill)

**Contact : 077 30 90 988**
**Classes Comments ON 10.08.2023**
**122, Fourth Cross ST., Jaffna.**

(CS/25795)AH-1


## காணி விற்பனைக்கு உண்டு

அரியாலை தென்மேற்கு ஆங்கில பாடசாலைக்கு பின்புறமாக A9 றோட்டிலிருந்து 2Km , யாழ் நகரிலிருந்து 7Km , 50 பரப்பு காணி விற்பனைக்குண்டு. முதலீட்டு நோக்கத்திற்கு பண்ணை அமைக்க சிறந்த இடம்.

**077 423 5458, 077 262 7581**

# மரண அறிவித்தல்

## அப்புத்துரை சந்திரசேகரன்



**தோற்றம்** 13.11.1953 — **மறைவு** 05.08.2023

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் யாமா சந்தியை வதிவிடமாகவும் கொண்ட அப்புத்துரை சந்திரசேகரன் நேற்று (05.08.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை தங்கரத்தினம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா அன்னபூபதி தம்பதியரின் மருமகனும், அருணகிரிநாயகியின் பாசமிகு கணவரும், காயத்திரி (சமுர்த்தி வங்கி - காரைநகர்), கஜீவா (யூனியன் அசூரன்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நிமலதாசன் (அஞ்சல் அதிபர் - பிரதி அஞ்சல்மா அதிபதி வடக்கு அலுவலகம்), நிரோஜன் (தேவை நாடும் மகளிர் அமைப்பு - மல்லாகம்) ஆகியோரின் மாமனாரும், அக்சராவின் பாசமிகு பேரனும், கமலாம்பிகை, ஞானசேகரன் (Swiss), பரமேஸ்வரி, காலஞ்சென்ற சண்முகதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராஜ்குமார், ராஜினி (டென்மார்க்), தர்சினி (Swiss), நிலானி, நிஷானி (கனடா), நிரோசன் ஆகியோரின் மாமனாரும், யருசன் (Swiss), சர்மிகன் (Swiss) ஆகியோரின் பெரிய தந்தையும், கணேசராசா, வரதராசா (ஓய்வுபெற்ற கூட்டுறவு முகாமையாளர்), அர்ச்சுணராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற பேரின்பநாதன் மற்றும் பரமேஸ்வரன், கல்யாணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**யாமா சந்தி,**
**உடுவில் தெற்கு,**
**மானிப்பாய்.**

**021 225 6814**
**077 844 9776**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs.25794) (N-1)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மைக் கொல்வாய்.
எம் பிள்ளைகளையும் கொல்வாய்
கொன்றெங்கே புதைப்பாய்?
நீ புதைக்குமிடம் புதைகுழியல்ல
அடை வைக்கும் இடமென்று அறிவாய் விரைவில்
புதுவை இரத்தினதுரை

பக்கங்கள்: 08

சஞ்சீவி

...wspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 ஆடி 21 ஞா...ற்றுக்கிழமை (06.08... ...163



# இந்திய உள்துறை அமைச்சர் இனப்படுகொலை என்று சொன்னாரா?

○ நிலாந்தன்

இந்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா கடந்த மாதம் 27ஆம் திகதி இராமேஸ்வரத்தில் வைத்து ஆற்றிய உரையில் இலங்கையில் இடம்பெற்றது பெரும் மனிதப்படுகொலை என்ற அர்த்தத்தில் ஒரு வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.

தமிழக பாரதிய ஜனதாக் கட்சியின் அமைப்பாளரான அண்ணாமலை "என் மண் என் மக்கள்" என்ற பெயரில் ஒரு பாதயாத்திரையை ஆரம்பித்திருக்கிறார். அதன் தொடக்க நிகழ்வு இராமேஸ்வரத்தில் இடம்பெற்றது. அதில் அமித்ஷா பேசினார். பேச்சின் ஒருபகுதி பின்வருமாறு..: "காங்கிரஸ் மற்றும் தி.மு.க.வின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஆட்சிக்காலத்தில்தான் இலங்கையில் தமிழர்கள் மீது இனப்படுகொலை நடந்தது. தமிழக மீனவர்கள் பெரும் துன்பத்துக்கு ஆளானார்கள்..."

இதில் அமித்ஷா பயன்படுத்திய வார்த்தை நேரடியாக இனப்படுகொலை என்ற அர்த்தத்தைத் தருகிறதா என்று விடயம் தெரிந்தவர்களிடம் கேட்டேன். அவர் "நரசங்கார" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியதாகவும், அதன் முதல் நிலை அர்த்தம் பெரும் மனிதப்படுகொலை என்றும் விவரம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். அதனை இனப்படுகொலை என்று வியாக்கியானம் செய்ய முடியும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அதேசமயம் அமைச்சரின் உத்தியோகபூர்வ ருவிற்றர் தளத்தில் இனப்படுகொலை என்ற வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.




மேற்படி அண்ணாமலையின் பாதயாத்திரை தொடர்பாக ஒரு காணொலி வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் ஓரிடத்தில் "ஈழத்தமிழர் கண்ணீர்ச்சாபம் என்றும் வீணாகிப்போகாது" என்ற ஒரு வசனம் உண்டு. அதைத் தொடர்ந்து "நமக்கு தமிழ் ஈழம் வேண்டும்" என்ற ஒரு சுலோக அட்டை, பாலச்சந்திரனின் முகம் போன்றன காட்டப்படுகின்றன. அந்தக்காணொலியும் காங்கிரஸ்.தி.மு.க. கூட்டுக்கு எதிராகத்தான் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இப்பொழுது விடயத்தைத் தொகுத்துப் பார்க்கலாம். அண்ணாமலை தென்னகத்தில் பாரதிய ஜனதாவின் நம்பிக்கை நட்சத்திரமாக மேலெழுந்து வருகிறார். ஈழத்தமிழர்களில் ஒரு பகுதியினர் அவரைக் கொண்டாடுகிறார்கள். தமிழகத்தில் அடுத்த தேர்தலை நோக்கி காங்கிரஸுக்கும் தி.மு.க.வுக்கும் இடையில் ஏற்பட்டிருக்கும் கூட்டு பலமானது என்று நம்பப்படுகிறது. இந்தக்கூட்டின் வெற்றி வாய்ப்புகளைக் குறைப்பதற்காக ஈழத்தமிழர்கள் விவகாரத்தையும் பாரதிய ஜனதா கையில் எடுத்திருக்கிறது. ஈழத்தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதற்கு காங்கிரஸும் தி.மு.க.வும் காரணம் என்று பாரதிய ஜனதா பிரசாரம் செய்கின்றது. பிரசாரத்தின் ஒரு பகுதியாகவே அமித்ஷா இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார்.

அமித்ஷா ஓர் உள்துறை அமைச்சர். உள்துறை அமைச்சு எனப்படுவது இந்தியாவைப் பொறுத்தவரையிலும் பிரதமருக்கு அடுத்தபடியான பதவி. அவ்வாறான பொறுப்பில் இருக்கும் ஒருவர், குறிப்பாக பாரதிய ஜனதாவின் பெருந்தலைவர்களில் ஒருவர், அவ்வாறு இனப்படுகொலை என்று தமிழில் ருவிற் செய்கிறார். அதை எப்படிப் பார்ப்பது?

உள்நாட்டு அரசியல் தேவைகளுக்காக வெளியுறவு சம்பந்தப்பட்ட ஒரு விவகாரத்தை பொறுப்பின்றிக் கையாள முடியாது. இலங்கைத்தீவில் இடம் பெற்றது பெரும் மனிதப்படுகொலை அல்லது இனப்படுகொலை என்று இந்திய உள்துறை அமைச்சர் கூறுகிறார். அது நிச்சயமாக இந்தியாவின் உத்தியோகபூர்வ நிலைப்பாடாகத் தெரியவில்லை. இந்தியா மட்டுமல்ல இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தி இலங்கைக்கு அச்சுறுத்தலான தீர்மானங்களை நிறைவேற்றிய கனடாகூட இலங்கையில் நடந்தது இனப்படுகொலை என்பதை அதன் உத்தியோகபூர்வ அரச நிலைப்பாடாக இதுவரை அறிவித்திருக்கவில்லை. உலகில் எந்த ஒரு நாடும் அப்படி அறிவித்திருக்கவில்லை. இதில் மேற்கத்தைய நாடுகளோடு ஒப்பிடுகையில் ஈழத்தமிழர்கள் பெருமெடுப்பில் படுகொலை செய்யப்பட்டார்கள் என்ற விடயத்தை இந்தியா வெளிப்படையாக, உத்தியோகபூர்வமாகக் கூறுவதை அநேகமாகத் தவிர்த்து வந்தது. ஆனால், அமித்ஷா இப்பொழுது அதை "நரசங்கார் Narasanhaar" என்று கூறுகிறார்.

1983 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 16 ஆம் திகதி பிரதமர் இந்திராகாந்தி நாடாளுமன்றத்தில் இலங்கையில் நடப்பது இனப்படுகொலை என்று கூறினார். 1983 ஜூலைப் படுகொலைகளை எதிர்த்து ஓகஸ்ட் மாதம் 16ஆம் திகதி தமிழகம் முழுவதும் வரலாறு காணாத பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய தினம் இந்திரா காந்தி நாடாளுமன்றத்தில் பின்வருமாறு உரையாற்றினார்..."இலங்கைத் தீவில் நடப்பது என்ன?அது இனப்படுகொலையைத் தவிர வேறு எதுவுமில்லை".

ஒரு இந்தியத் தலைவர் அவ்வாறு குறிப்பிட்டமை அதுதான் முதல் தடவை. அதற்குப் பின் எந்த ஒரு இந்தியத் தலைவரும் அவ்வாறு கூறியிருக்கவில்லை. இந்திரா காந்தி அவ்வாறு கூறி, சரியாக 40 ஆண்டுகளின்பின் இந்திய உள்துறை அமைச்சர் இப்பொழுது இனப்படுகொலை என்ற பொருள்பட கருத்துரைத்துள்ளார்.

ஆனால், அதை அவர் ஓர் அரசியல் நிலைப்பாடாகக் கூறவில்லை என்று இந்திய ஊடகவியலாளர் சுட்டிக்காட்டினார். தமிழகத்தில் தி.மு.க., காங்கிரஸ் கூட்டைத் தோற்கடிப்பதற்கான வியூகத்தின் ஒருபகுதியே அதுவென்று அவர் வர்ணித்தார். தமிழக அரசியலில் ஈழத்தமிழர் விவகாரம் எனப்படுவது ஈழத் தமிழ்நோக்குநிலையில் இருந்து கையாளப்படுவதை விடவும் தமிழகத்தின் தேர்தல் அரசியல் நோக்குநிலையில் இருந்துதான் கையாளப்பட்டு வருகிறது என்பது ஈழத்தமிழர்களின் துயரங்களில் ஒன்று. அண்ணாமலையின் வருகைக்குப்பின் பாரதிய ஜனதா தமிழகத்தில் எழுச்சியைக் காட்டுகின்றது. அதேசமயம் காங்கிரஸுக்கும் தி.மு.க.வுக்கும் இடையிலான கூட்டுப் பலமானது; வெற்றி வாய்ப்புகளைக் கொண்டது என்றும் நம்பப்படுகிறது. அதனால்தான் அந்தப் பலத்தை உடைக்கும் நோக்கத்தோடு ஈழத்தமிழர்களின் விடயத்தில் தவறிழைத்தது இந்த இரண்டு கட்சிகளின் கூட்டுத்தான் என்று அமித்ஷா கூறுகிறார். குறிப்பாக அமித்ஷா அவ்வாறு கூறிய இடம், கூறிய காலம் எது என்பதை இந்திய - இலங்கை உறவுகளின் பின்னணியில் வைத்தும் பார்க்கவேண்டும். அண்மையில் ரணில் விக்கிரமசிங்க டில்லிக்குச் சென்றிருந்தார். அங்கே அவர் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே ஒரு தரைவழிப் பாலத்தைக் கட்டுவது தொடர்பான முன்மொழிவைக் கொடுத்திருந்தார்.

அந்த முன்மொழிவை அவர் ஏற்கனவே 2004 ஆம் ஆண்டும் முன்வைத்திருந்தார். அப்பொழுது அவர் பலவீனமான பிரதமர். அப்பொழுது சந்திரிகா ஜனாதிபதியாக இருந்தார். அந்த ஆட்சியை விமர்சகர்கள் இரட்டை ஆட்சி என்று வர்ணித்தார்கள். சந்திரிகா ஒரு பக்கம் இழுக்க, ரணில் இன்னொரு பக்கம் இழுத்தார்.

அதன்பின் 2015 இல் ரணில் ஆட்சிக்கு வந்ததும் இந்திய வீதிப்போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி பாலம் கட்டும் யோசனையைப் புதுப்பித்தார். அப்பொழுதும் ரணில் பலமான தலைவர் அல்லர். அவர் பலவீனமான ஒரு பிரதமராக இருந்தார். ஜனாதிபதியாக மைத்திரி இருந்தார். அங்கேயும் இருவருக்கும் இடையே இழுபறி இருந்தது. அதனால் நிதின் கட்கரியின் யோசனையின் தொடர்ச்சியாக உரையாட ரணில் தயாராக இருக்கவில்லை.

ஆனால், ரணில் அந்த யோசனையை முன்வைத்து 11 ஆண்டுகளின் பின் நிதின் கட்கரி அந்த யோசனையை மீண்டும் புதுப்பித்தமை என்பதில் இந்தியாவின் வெளியுறவு இலக்குகள் இருந்தன. ரணில் பலவீனமானவரோ இல்லையோ அவர் ஒரு தலைவர். அவர் முன்வைக்கும் யோசனையை இறுகப் பற்றிப்பிடித்துக் கொள்வதன் மூலம் இந்தியா அந்த விடயத்தை 'சீரியஸாகக்' கையாள முற்பட்டது. ஆனால், அப்பொழுது ரணில் பலவீனமான ஒரு பிரதமராக இருந்தார்.

இப்பொழுது மீண்டும் 19 ஆண்டுகளின் பின் அதே யோசனையை ரணில் முன்வைத்திருக்கிறார். ஆனால், இப்பொழுதும் அவர் பலவீனமான, அதாவது மக்கள் ஆணை இல்லாத ஒரு ஜனாதிபதிதான். தாமரை மொட்டுக்களின் தயவில் தங்கியிருப்பவர். அதாவது அந்தப்பாலத்தைக் கட்டும் முன்மொழிவுகளை ரணில் முன்வைக்கும் போதெல்லாம் அவர் பலவீனமான ஒரு தலைவராகவே இருக்கிறார். ஆனால் அவர் பலவீனமானவரா, பலமானவரா என்பதல்ல இங்கு பிரச்சினை. அவர் ஓர் அரசுத் தலைவர். மற்றொரு அரசுத் தலைவருக்கு அவர் வழங்கிய வாக்குறுதி அது. எனவே இந்தியா அந்த வாக்குறுதியை எப்படி நடைமுறைப் படுத்துவது என்றுதான் சிந்திக்கும்.

அப்படி ஒரு பாலத்தை ரணில் மட்டுமல்ல எந்த ஒரு சிங்களத் தலைவருமே கட்டத் துணியமாட்டார்கள் என்பது இந்தியாவுக்குத் தெரியும். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே சுமுகமான உறவு உள்ளவரை, அப்படி ஒரு பாலம் கட்டப்படுவதற்கு எந்த ஒரு இலங்கைத் தலைவரும் ஒப்புக் கொள்ளப் போவதில்லை. அப்படி ஒரு பாலம் கட்டப்பட்டால் இலங்கை, இந்தியாவின் மாநிலம் ஆகிவிடும் என்றுதான் சிங்கள மக்கள் சிந்திப்பார்கள். எனவே அது விடயத்தில் எந்த ஒரு சிங்களத் தலைவரும் 'ரிஸ்க்' எடுக்கத் துணிய மாட்டார்கள்.


அப்படியானால், ஏன் ரணில் திரும்பத் திரும்ப அது தொடர்பான வாக்குறுதிகளை இந்தியாவுக்கு வழங்குகிறார்.? ஏனென்றால் இந்தியாவை வசப்படுத்த அது உதவும் என்று அவர் நம்புகின்றார். அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் ஜனாதி

06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காவது தமிழியல் மாநாட்டில் கௌரவம்பெறும் பேராசிரியர்கள்





தமிழ்கூறும் நல்லுலகின் தவிர்க்க முடியாத ஆளுமைகள், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறையால் முன்னெடுக்கப்படவுள்ள நான்காவது தமிழியல் மாநாட்டில் கௌரவிக்கப்படவுள்ளனர். இவ்வாறு கௌரவிப்புப் பெறுகின்றவர்களில் இருவரான தகைசால் பேராசிரியர் இலக்கியக்கலாநிதி எஸ்.தில்லைநாதன், தகைசால் பேராசிரியர் முதுமுனைவர் அருணாசலம் சண்முகதாஸ் ஆகியோர் தொடர்பான சிறப்புப் பகிர்வே இது...

## தகைசால் பேராசிரியர் இலக்கியக்கலாநிதி எஸ்.தில்லைநாதன்

தகைசால் பேராசிரியர் இலக்கியக்கலாநிதி எஸ்.தில்லைநாதன் 1937ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி யாழ்ப்பாணம் - சுன்னாகத்தில் பிறந்தவர். சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்வி கற்று (1947 - 1956) பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் (1957 - 1964), சென்னைப் பல்கலைக்கழகத்திலும் பட்டப்படிப்புகளையும் பட்டமேற்படிப்புகளையும் (1969) தொடர்ந்தவர். புகழ்பெற்ற பேராசிரியர்களான க.கணபதிப்பிள்ளை, சு.வித்தியானந்தன் என்போரின் வழிகாட்டலில் உருவாகியவர். இலங்கை வித்தியோதயப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம் என்பவற்றில் பணியாற்றியவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பதவியுயர்ந்து அந்தப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் பலம் மிக்க தூணாக விளங்கியவர். தமிழ்த்துறைத் தலைவராக, பீட சபை, மூதவை என்பவற்றின் உறுப்பினராக இருந்து பணியாற்றியவர்.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளில் சரளமான புலமைமிக்க இவர், ஆழ்ந்த வாசிப்பும் தேடலும் ஆராய்ச்சித்திறனும் கொண்டவர். பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் பல நூற்றுக்கணக்கான கட்டுரைகளை ஈழத்துத் தமிழ் இலக்கியம், மொழியியல், சமூகவியல், கலை இலக்கிய விமர்சனம், நாட்டாரியல், சமயம், தொடர்பாடல் முதலான புலங்கள் சார்ந்து எழுதியவர். வானொலியிலும் தமிழ்மொழி, இலக்கியம் என்பன தொடர்பாகப் பல உரைகளை ஆற்றியவர். அவரது கட்டுரைகளும் வானொலி உரைகளும் 'வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை', 'இலங்கைத் தமிழ் இலக்கியம்', 'இலக்கியமும் சமுதாயமும்', 'பண்பாட்டுச் சிந்தனைகள்', 'சோழர்கால அரசவை இலக்கியங்கள்' முதலான நூல்களாக வெளிவந்துள்ளன. இலக்கிய வாசிப்பு மட்டுமன்றி இலக்கியப் படைப்பிலும் ஈடுபட்டு வந்தவர். சிறுகதைகள், கவிதைகள், நாடகங்கள் என்பவற்றை எழுதியவர், நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியவர்.

பல்கலைக்கழகத்துக்கப்பாலும் இவரது பணி விரிவு பெற்றுள்ளது. இலங்கையின் தமிழ்க் கல்விப் பாடத்திட்டம் தொடர்பாக விதந்துரைக்கத்தக்க பணிகளை ஆற்றியவர். பாடத்திட்ட உருவாக்கம், திருத்தம், விரிவாக்கம் என்பவற்றிலும் பாடநூல், ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள், கையேடுகள் உருவாக்கம் என்பவற்றிலும் முன்னின்று உழைத்தவர். தேசியக் கல்வி நிறுவகத்தின் தமிழ் மொழிப் பிரிவின் ஆலோசனைச் சபை அங்கத்தவராகவும் நிபுணத்துவ ஆலோசகராகவும் கடமையாற்றியவர். அதன் ஆட்சிச் சபை உறுப்பினராகவும் அவர் பணியாற்றியுள்ளார். இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பல்வேறு பொறுப்புமிக்க பணிகளில் மிக நீண்டகாலமாக ஈடுபட்டு வரும் இவர், பொதுப் பரீட்சைக் காலங்களில் ஆற்றிவரும் பணிகள் அளவிடற்கரியதாகும்.

கலாசார அமைச்சின் கீழ் இயங்கிவந்த தமிழ் இலக்கியக் குழுத் தலைவராகவும் தமிழ் நாடகக் குழுவின் அங்கத்தவராகவும் பணியாற்றியவர். இலங்கைக் கலைக்கழகத்தின் உறுப்பினராகவும் செயற்பட்டவர். இலங்கை அரசகரும மொழிகள் திணைக்களத்தில் மிக முக்கியமான பதவியை வகித்தவர்.

ஊடகத்துறையிலும் நாட்டம் கொண்ட இவர், 1960களில் தினகரன் பத்திரிகையின் ஆசிரியர் பீடத்தில் கடமையாற்றியதோடு ஒப்சேவர் ஆங்கிலப் பத்திரிகையில் தமிழ் விடயங்களைப் பற்றி எழுதுவதற்கான ஆசிரியராகவும் விளங்கினார். தமிழ் இலக்கியச் செழுமையை ஆங்கிலப்பத்திரிகை வாசகர்கள் அறிந்து கொள்ளுவதற்கு உதவியாக விளங்கியவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் செயற்பட்டவர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் அதிதிப் பேராசிரியராகவும் நிபுணத்துவ ஆலோசகராகவும் கடமையாற்றிவர். அந்தப் பல்கலைக்கழகத்தால் 2022ஆம் ஆண்டு கௌரவ இலக்கியக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு இவரது தமிழ்மொழி மற்றும் இலக்கியச் சேவையைப் பாராட்டும் முகமாக 1993ஆம் ஆண்டு 'இலக்கியச் செம்மல்' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. 1994ஆம் ஆண்டு அதியுயர் தேசிய விருதான 'கலாகீர்த்தி' விருது இலங்கை ஜனாதிபதியினால் இவருக்கு வழங்கப்பட்டது.

## தகைசால் பேராசிரியர் முதுமுனைவர் அருணாசலம் சண்முகதாஸ்

தகைசால் பேராசிரியர் முதுமுனைவர் அருணாசலம் சண்முகதாஸ் இலங்கையின் திருகோணமலையில் 1940ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 02ஆம் திகதி பிறந்தவர். 1963இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்பு இளங்கலைப் பட்டம் பெற்றவர். ஸ்கொட்லாந்து எடின்பறோ பல்கலைக்கழகத்தில் 1972இல் மொழியியலில் முனைவர் பட்டம் பெற்றவர்.

பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களில் பணிசெய்தவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும், கலைப்பீடாதிபதியாகவும், பட்டப்பின்படிப்புகள்பீடாதிபதியாகவும்சிலவேளைகளில்பதில்துணைவேந்தராகவும் பணிபுரிந்துள்ளார். மானிய ஆணைக்குழுவின் துணைக்குழுக்களில் அங்கம் வகித்தவர். இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நிபுணத்துவ மதியுரை பேராசிரியராக 2009 இல் இருந்துள்ளார். 2010 முதல் 2012 வரை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேரவை உறுப்பினராகவும் பணியாற்றியவர். ஜப்பான் கக்சுயின் பல்கலைக்கழகத்திலும், நைஜீரியா இபாடன் பல்கலைக்கழகத்திலும் மொழியியல் கற்பிப்பதற்கான விருந்துநிலைப் பேராசிரியராகவும் பணிசெய்துள்ளார். 2005 முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் டென்மார்க், நோர்வே நாடுகளும் இணைந்து நடத்திய ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் இயக்குநராகப் பணியாற்றினார். யுனெஸ்கோ வழங்கிய புலமைப்பரிசிலில் இந்தியாவில் புதுடில்லி, பாரதியார், மனோன்மணியம் சுந்தரனார், சென்னைப் பல்கலைக்கழகங்களின் ஊடகத் துறைகளுக்கும் டென்மார்க் ஆர்கோஸ் ஊடகக் கல்லூரிக்கும் சென்று வந்தார்.

35க்கும் மேற்பட்ட நூல்களையும் 200க்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளார். இலங்கை அரசு இவருக்கு 'சாகித்ய ரத்னா' விருதை 2008இல் வழங்கியது. திருக்குறள் பெருவிழாவைச் சிறந்த முறையில் ஒழுங்கமைக்க மதியுரை வழங்கியமைக்காக 'ஜனாதிபதி விருது' 2019இல் வழங்கப்பட்டது. 2020இல் உலகத் தமிழ்ச் சங்கம் (மதுரை) இவருக்கு 'தமிழ் இலக்கண விருது' வழங்கிச் சிறப்பித்தது. இவர் மலேசியா, சிங்கப்பூர், மொரிசியஸ், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளில் நடைபெற்ற உலகத் தமிழாசிரியர் மாநாடுகளில் பங்கேற்றவர். சென்னை, பாரிஸ், யாழ்ப்பாணம், மொரிசியஸ், கோலாலம்பூர், சிக்காகோ ஆகிய நகரங்களில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளில் பங்கேற்றவர். 2013இல் இலண்டனில் நடைபெற்ற உலகத் தமிழியல் மாநாட்டைத் தலைமையேற்று நடத்தியவர்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராக 1993 தொடக்கம் 2003 வரையும் பணியாற்றியவர். யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றி தற்போது அதன் பெருந்தலைவராகவுள்ளார். 2019 தொடக்கம் உலகத் தமிழாராய்ச்சிமன்றத்தின் பொதுச்செயலாளர்களுள் ஒருவராகப் பணிசெய்து வருகிறார். சென்னை உலகத் தமிழாராய்ச்சி மன்றம், உலகத் திராவிட மொழியியல் மன்றம் முதலானவற்றின் வாழ்நாள் உறுப்பினர். 2023 முதல் கிழக்குப் பல்கலைக்கழகப் பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் மொழிகள், சமயம் மற்றும் பண்பாட்டுப் பாடநெறிகளின் கற்கை அவைக்கு வெளிநிலை உறுப்பினராக நியமனம் பெற்றுள்ளார். 2023 முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இந்துக் கற்கைகள் பீடத்தின் வெளிநிலை உறுப்பினராக நியமனம் பெற்றுள்ளார்.



நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புகளும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

- சிறுகதை
- பத்தி எழுத்து
- கட்டுரை
- கவிதை
- ஓவியம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்கக் காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் வசித்த அமெரிக்க சனாதிபதியின் சகோதரி:

# அனா நீல் கிளீவ்லாண்ட் ஹாஸ்ரிங்ஸ்

## Anna Neal Cleveland Hastings (1830 - 1909)

○ பா. துவாரகன்

## யாழ்ப்பாண மருத்துவ 24 வரலாறு: சில குறிப்புக்கள்

**யாழ்ப்பாணக் கல்லூரியும் புகழ்பெற்ற மாணவர்களும்**

அண்மையில் தனது 200 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிய யாழ்ப்பாணக் கல்லூரியானது 1823 ஆ[illegible] வட்டுக்கோட்டைக் கல்விக்கழ[illegible]ticotta Seminary) என்ற பெயரில் [illegible]கப்பட்டது. வட்டுக்கோட்டை கல்விக[illegible]னது அன்று ஐரோப்பியப் பல்கலைக்கழ[illegible]க்கு இணையானதாக விளங்கியது. கிறித்துவ[illegible] அதிகமான மாணவர்களை உள்ளீர்க்[illegible]த காரணத்தால் 1855 இல் இதன் கற்றல் [illegible]பாடுகள் முடிவுக்கு வந்தன.

வட்டுக்கோட்டை கல்விக்கழகம் இருந்த இடத்திலிருந்தே அதாவது "பற்றிக்கோட்டா செமினரி"யின் சாம்பலிலிருந்தே 1872 இல் யாழ்ப்பாணக் கல்லூரி மீள உயிர்த்தது. வட்டுக்கோட்டைக் கல்விக்கழகத்தின் கடைசி அதிபராகவும் யாழ்ப்பாணக் கல்லூரியின் முதலாவது அதிபராகவும் வண. ஈ.பி. ஹாஸ்ரிங்ஸ் அடிகளார் விளங்கினார்.

2005 ஆம் ஆண்டு இலண்டன் 'Cambridge Bibliographical Association' ஆல் 'International Bibliography Intellectual' விருதை பெற்றவரும் யாழ். பல்கலைக்கழக தற்போதைய வேந்தரும் வரலாற்றுத்துறைப் பேராசிரியருமான சி. பத்மநாதன், தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் ஆயர்களான வண. சபாபதி குலேந்திரன், டி. ஜெ. அம்பலவாணர் மற்றும் கலாநிதி எஸ். ஜெபநேசன், கல்வியியலாளர்களான சீலன் கதிர்காமர், றஜனி திரணகம, சற்றடே ரிவியூ ஆசிரியர் எஸ். சிவநாயகம், மூத்த ஊடகவியலாளர் டி.பி.எஸ். ஜெயராஜ், உயர் நீதிமன்ற நீதியரசர் பி. ஶ்ரீஸ்கந்தராசா, செனற்றர் நாகலிங்கம், ஹண்டி பேரின்பநாயகம், பேராசிரியரும் வானியல் அறிஞருமான அலன் ஆபிரகாம் முதலான பல புகழ்பூத்த கல்விமான்களை யாழ்ப்பாணக் கல்லூரி உருவாக்கியது. (விரிவஞ்சி பேரறிஞர்கள் பலரது பெயர்கள் இங்கு குறிப்பிடப்படவில்லை.)

**யாழ்ப்பாணக் கல்லூரியை பட்டக் கல்லூரியாக்க அயராது பாடுபட்ட மருத்துவர் கிறீன்**


1874 ஒகஸ்ட் மாதமளவில் கிறீனது சகோதரி லூசி, மறைந்த தமது தந்தையின் நினைவாக 1000 அமெரிக்க டொலரை யாழ்ப்பாணக் கல்லூரியில் மருத்துவம் மற்றும் இயற்கை விஞ்ஞான கிறீன் பேராசிரியத்துவ பதவிநிலையை (Green Professorship of Medicine and Natural Science) உருவாக்கும் நிதியத்துக்கு வழங்கினார்.



Grover Cleveland with his family c. 1872


Image Source: https://presidentcleveland.org/president-clevelands-biography/

படத்தில் அமெரிக்க அதிபராக இருந்த குரோவர் கிளீவ்லாண்ட் அவர்களுடன் யாழ்ப்பாணத்தில் வசித்த அவரது சகோதரி - அனா நீல் கிளீவ்லாண்ட் அவர்களும் காணப்படுகின்றார்.



Rev. E.P. Hastings M.A, D.D
Principal (Seminary) 1849 - 1855
(College) 1872 - 1889

Image Source: A Century of English Education_



Artist: Anders Leonard Zorn, 18 Feb 1860 - 1920, Sitter: Stephen Grover Cleveland, 18 Mar 1837 - 24 Jun. 1908, Date: 1899, Type: Painting, Medium: Oil on canvas, Credit Line: National Portrait Gallery, Smithsonian Institution; gift of the Reverend Thomas G. Cleveland




1874 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 23 ஆம் திகதி மருத்துவர் கிறீன் ABCFM க்கு எழுதிய கடிதத்தில் 1876 ஆம் ஆண்டு நிறைவில் யாழ்ப்பாணம் செல்லும் ஆர்வத்தை மீளவும் வெளிப்படுத்தியிருந்தார். கிறீன் இவ்வாறு கடிதம் எழுதிய போதும் கிறீன் மற்றும் அவரது மனையாள் ஆகியோரின் ஆரோக்கியம் மேம்பட்டிருக்கவில்லை.

டேவிட் எ. வெல்சு பண்டிதர் எழுதிய இரசாயனவியல் (Chemistry) நூலை மருத்துவர் கிறீன் , மருத்துவர்களான சப்மான் வைத்திலிங்கம் மற்றும் எஸ். சுவாமிநாதன் ஆகியோரின் உதவியுடன் மொழிபெயர்த்திருந்தார். 1875 ஆம் ஆண்டு அச்சிடும் பணி நிறைவடைந்தது. இந்நூல் 'கெமிஸ்தம்' என்ற பெயரில் 520 பக்கங்களில் தமிழில் வெளிவந்தது. இந்நூல் அமெரிக்க இலங்கை மிசனுக்காகத் தென்னிந்தியாவிலுள்ள நாகர்கோயில் இலண்டன் மிசன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது.

மருத்துவர் கிறீன், யாழ்ப்பாணக் கல்லூரி அதிபராக இருந்த வண. ஈ. பி. ஹாஸ்ரிங்ஸ் அடிகளாரது வேண்டுகோளுக்கு ஆதரவாக 1875 ஆம் வருடம் செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி ABCFM க்கு ஒரு கடிதம் அனுப்பினார். இந்தக்கடிதத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியை இயக்குவதற்கு ஹாஸ்ரிங்ஸ் அவர்களுக்கு உதவியாக இளைஞர் ஒருவரை யாழ்ப்பாணம் அனுப்புமாறு கேட்டிருந்தார்.

தொடர்ந்து 1875 ஆம் வருடம் ஒக்ரோபர் மாதம் 25 ஆம் திகதி கிறீன் ABCFM க்கு எழுதிய கடிதத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டங்களை வழங்கும் தகுதியை, பட்டயத்தைக் கொண்டிருக்காவிட்டால் மசாசுசெட்ஸ் மாநிலத்தின் ஒரு சட்டவாக்கத்தின் மூலம் பட்டம் வழங்கும் அதிகாரத்தை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வழங்குமாறு கேட்டிருந்தார். அவ்வாறில்லாவிடில் யாழ்ப்பாணக் கல்லூரியை அம்கர்ஸட் அல்லது கொலம்பிய பல்கலைக் கழகங்களின் (Amherst or Colombia University) இணைந்த கல்லூரியாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கேட்டிருந்தார்.

கிறீனின் மானிப்பாய் மருத்துவக் கல்லூரியில் பயின்ற 9ஆவது அணியினரே அதிக எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்டிருந்தனர். இவர்கள் 1875 ஆம் ஆண்டு தமது மருத்துவக் கல்வியை நிறைவு செய்தனர். 1876 இல் 10 ஆவது அணி மருத்துவ மாணவர்கள் தமது கல்வியை ஆரம்பித்தனர். கிறீன் அமெரிக்கா சென்ற பின்னர் மானிப்பாய் மருத்துவப்பீடம் அவரிடம் கல்வி பயின்ற மருத்துவர்களால் நடத்தப்பட்டது.

கிறீன் அமெரிக்காவுக்குச் சென்ற பின்னரும் ஓய்வெடுக்கவில்லை; பிரபல்யமான மருத்துவக் கட்டுரைகளைத் தமிழில் மொழிபெயர்த்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வந்தார். கண், காது, கை மற்றும் வாய் (The Eye, The Ear, The Hand & The Mouth) முதலான உடற்சுவற்றியலின் [illegible] பற்றிய தனியான ஆய்வுக் கட்டுரைகளைத் தமிழில் மொழிபெயர்த்தார். கிறீனது கையெழுத்துப்படிகள் தபால் மூலமாக யாழ்ப்பாணத்துக்கு வந்தன. இவை யாழ்ப்பாணத்தில் அச்சிடப்பட்டு மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

1877 ஆம் ஆண்டு சனவரி மாதம் கிறீன் ABCFM க்கு அனுப்பிய வரைவு ஆவணத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியின் நம்பிக்கைச்சபை நிதியத்துக்குப் புதிதாக மூவரது பெயர்களை முன்மொழிந்திருந்தார். அத்துடன் யாழ்ப்பாணக் கல்லூரியை அம்கர்ஸ்ட் பல்கலைக்கழகத்தின் (Amherst University) இணைந்த கல்லூரியாக்கும் அவசியத்தையும் நினைவூட்டியிருந்தார்.

இந்தக்காலப் பகுதியில் மருத்துவர் சப்மான் வைத்திலிங்கம் டால்ரன் பண்டிதருடைய (Prof. John C. Dalton, M.D.) உடற்றொழிலியல் (Human Physiolo gy) நூலை மொழிபெயர்த்து அமெரிக்காவிலிருந்த கிறீனுக்கு அனுப்பி வந்தார். கிறீன் அவற்றில் தேவையான திருத்தங்களைச் செய்ததுடன் ஆங்கில மருத்துவச் சொற்களுக்கு இணையான புதிய தமிழ்ப்பதங்களை (கலைச்சொற்கள்) உருவாக்குவதிலும் ஏற்கனவே உருவாக்கிய சொற்களை மேம்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்தினார். 1877 ஆம் வருட இறுதிப்பகுதியில் இந்நூலின் மொழிபெயர்ப்புப் பணி பூர்த்தியாகியது. அமெரிக்க இலங்கை மிசன் 590 பக்கங்களைக் கொண்ட இந்நூலை 'மனுஷ சுகரணம்' என்ற பெயரில் மானிப்பாயில் அச்சிட்டு வெளியிடத் தீர்மானித்தது. இந்நூலின் அச்சாக்கப் பணி 1883 ஆம் ஆண்டு நிறைவடைந்தது.

**குரோவர் கிளீவ்லாண்ட் அமெரிக்க அதிபராக இருந்த போது யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த அவரது சகோதரி அனா!**

ஓர் அமெரிக்க சனாதிபதியின் பதவிக்காலம் முழுவதும் அந்த சனாதிபதியின் சகோதரி யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தார் என்பது வியப்பானதாக இருக்கலாம். 1884 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4 ஆம் திகதி நடைபெற்ற அமெரிக்க அதிபர் தேர்தலில் சனநாயகக் கட்சி வேட்பாளரான குரோவர் கிளீவ்லாண்ட் வெற்றிபெற்று அமெரிக்காவின் 22 ஆவது சனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். குரோவர் அடுத்த தடவை(1888) நடைபெற்ற தேர்தலில் தோற்ற போதிலும் மீண்டும் 1892 இல் போட்டியிட்டு 2ஆவது தடவையாகவும் அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் என்ற சிறப்புக்குரியவர். குரோவர் கிளீவ்லாண்ட் 1885 - 1889 வரையான காலப்பகுதியில் அமெரிக்காவின் 22 ஆவது சனாதிபதியாகப் பதவியில் இருந்த போது அவரது சகோதரி அனா கிளீவ்லாண்ட் வட்டுக்கோட்டையில் வாழ்ந்தார். அனா கிளீவ்லாண்ட் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபராக விளங்கிய வண. ஹாஸ்ரிங்ஸ் (Rev. E. P. Hastings) அடிகளாரின் மனைவி. இதனைப் பின்வருமாறு பிறிதோர் விதமாகவும் கூறலாம். குரோவர் கிளீவ்லாண்ட் அமெரிக்க அதிபராக இருந்தபோது அவரின் மைத்துனரே (சகோதரியின் கணவர் வண. ஈ. பி. ஹாஸ்ரிங்ஸ்) வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராக இருந்தார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**நடிகர் திலகம் சிவாஜிகணேசனின் மூத்த மகனான ராம்குமார் யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் வந்திருந்தார். யாழ். வருகை அனுபவங்கள், சிவாஜி பற்றிய நினைவுகள் தொடர்பில் 'உதயன் - சஞ்சீவி' வாசகர்களுக்காக அவர் வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.**



# மூளாயில் அப்பா சிவாஜிகணேசன் நட்ட மரத்தைப் பார்த்தபோது நெகிழ்ந்துபோனேன்!

நேர்கண்டவர்: ஔண்யன்
படங்கள்: ஐ. சிவசாந்தன்



நடிகர் திலகம் சிவாஜிக
ராம்குமாரின் பிரத்

**கே: இதுதான் உங்களது முதல் யாழ்ப்பாண வருகை. இந்த வருகையின் போது யாழ்ப்பாணத்தில் மக்கள் காட்டிய வரவேற்பை எப்படி உணர்கிறீர்கள்?**

ப: மிகப்பெருமையாக இருந்தது. எனது தந்தை பற்றிய நூல் வெளியீட்டுக்காகத் தான் பிரதானமாக வந்திருந்தேன். இதன் போது ஒரு நெகிழ்ச்சியான சம்பவம் நடந்தது. மூளாயில் உள்ள மருத்துவமனைக்கு என்னை அழைத்திருந்தார்கள். அந்த மருத்துவமனையைக் கட்டுவதற்காக எனது தந்தை ஒரு நாடகம் நடத்தி அதில் கிடைத்த நிதியை அப்படியே கொடுத்திருந்தார். அதனால் அந்த மருத்துவமனை நிர்வாகத்தின் அழைப்பை ஏற்று அங்கு சென்றேன். அந்த மருத்துவமனைக்கு அப்பா வந்தபோது ஒரு மாமரத்தை நட்டிருந்தார். 'இதோ உங்கள் அப்பா நட்ட மரம்' என்று அவர்கள் அதைக் காட்டியபோது, அப்படியே மெய்சிலிர்த்துப் போய்விட்டேன். உணர்ச்சிப் பெருக்கில் அந்த மரத்தின் கீழ் அப்படியே இருந்துவிட்டேன். அப்பாவின் அன்பில் திளைப்பது போன்ற ஒரு உணர்வை அந்த மரநிழல் தந்தது. கடல் கடந்த தேசத்திலும் இப்படி அப்பாவின் நினைவு தொடர்வதை நினைக்க ஆனந்தக் கண்ணீரே வந்துவிட்டது. அதைவிட நல்லூர்க் கந்தசுவாமி கோயில் உட்பட சில இடங்களுக்கும் சென்றேன். அங்கெல்லாம் மக்கள் என்னை இனங்கண்டுகொண்டு அன்பாக உரையாடினார்கள். இவையெல்லாம் எனது அப்பாவின் மீதுள்ள யாழ்ப்பாண மக்களின் பிரியத்தின் வெளிப்பாடே. என்மீதே இப்படி பிரியமென்றால் என் தந்தை மீதும், என் தம்பி பிரபு மீதும் எவ்வளவு பிரியம் வைத்திருப்பார்கள் என்றும் எண்ணிக்கொண்டேன்.

**கே: பொதுவாகவே தமிழக முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர் தான் பெரும் வள்ளல் என்று மக்களிடையே ஒரு கருத்துண்டு. ஈழப்போராட்டத்துக்கு கூட எம்.ஜி.ஆர் கோடிக்கணக்கில் அள்ளிக் கொடுத்திருந்தார். ஆனால் சிவாஜி கணேசன் அப்படி நிதியுதவியை எவருக்கும் செய்ததாக முன்னர் பெரியளவில் பேசப்படவில்லை. இப்போது ஈழத்தில் மூளாயில் உள்ள மருத்துவமனைக்கு நாடகம் நடத்தி , அதில் கிடைத்த முழுத் தொகையும் கொடுத்த தகவல் பரவலாகி வருகின்றது. இப்படி சிவாஜிகணேசன் வேறு உதவிகளையும் வழங்கி இருக்கிறாரா?**

ப: உண்மையில் எம்.ஜி.ஆரை விடவும் சிவாஜிகணேசன் தான் மிகப் பெரிய கொடை வள்ளல். ஆனால் எம்.ஜி.ஆர் செய்த உதவிகளை ஊடகங்கள் பிரதானப்படுத்தி மக்களிடம் கொண்டு சென்றன. சிவாஜி கணேசனோ இந்தப் பிரபல வெளிச்சம் பிடிக்காதவர். வலக்கை கொடுப்பது இடக்கைக்குத் தெரியக்கூடாது என்று நினைப்பவர். அதனால் அவர் எத்தனையோ பேருக்கு எவ்வளவோ உதவிகள் செய்தபோதும், அதை வெளிப்படுத்தியதில்லை. அத்தோடு திராவிடக் கட்சிகளும் திட்டமிட்டு சிவாஜிகணேசன் பற்றிய செய்திகளை இருட்டடிப்புச் செய்தன. எனவே அவரின் உதவிகள் மக்களுக்குத் தெரியவராமலே போய்விட்டன. ஆனால் இப்போது எல்லா உண்மைகளும் வெளிவரத்தொடங்கியுள்ளன.

**கே: உங்கள் தந்தையாருக்கு ஈழத்தமிழர்கள், அவர்களின்விடுதலைப்போராட்டம் பற்றி எவ்வித நிலைப்பாடு இருந்தது?**

ப: உண்மையாகவே அதைப்பற்றியெல்லாம் எனக்குத் தெரியாது. அவ்வளவு ஏன், இந்த மூளாய் மருத்துவமனைக்காக வந்து நாடகம் போட்டு நிதி கொடுத்தது கூட எனக்கு இப்போதுதான் தெரியும். ஆனால் இலங்கைக்கு அப்பா வந்து போகின்ற விடயம் தெரியும். அப்போதெல்லாம் இலங்கைக்கு வருவதற்கு ஒரு பெரிய பாஸ்போர்ட் இருந்தது. கிட்டத்தட்ட 20 இஞ்ச் உயரமான அந்தப் பாஸ்போட்டோடு அப்பா அடிக்கடி செல்வதைப் பார்த்திருக்கிறேன். அதைத் தவிர இங்குள்ள மக்கள், போராட்டம் பற்றி அவர் என்னவிதமான மனநிலையைக் கொண்டிருந்தார் என அவர் எங்களோடு பகிர்ந்து கொண்டதில்லை, நாங்களும் கேட்டதில்லை.
ஆனால் புலம்பெயர் தமிழர்கள் அவரைச் சந்தித்திருக்கிறார்கள். குறிப்பாக 1993 இல் தேவர் மகன் படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்த போது, அப்பாவுக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. அப்போது அவர் சிகிச்சைக்காக பிரான்ஸில் உள்ள மருத்துவமனையில் இருந்தபோது, புலம்பெயர் மக்கள் அவரைச் சந்தித்திருக்கிறார்கள். அதைவிட சிங்கப்பூரில் போராளிக்குழுவைச் சேர்ந்த ஒருவர்- ஒரு காலை இழந்தவர்- என் அப்பாவைச் சந்தித்து உரையாடியிருந்தார். அவர்கள் அப்படி உரையாடும் போது, நாங்கள் இருப்பதில்லை. நிதியுதவியும் அவர் செய்திருக்கலாம். ஆனால் அதையெல்லாம் அப்பா ஒருபோதும் வெளிப்படுத்தியதில்லை. பிரபலத்துக்காகச் செய்வது உதவியாகாதே.

**கே: உங்களுக்கு இளையவரான பிரபு, நடிப்புலகில் புகுந்து தனக்கென ஒரு தனியிடத்தையும் பெற்றிருந்தார். ஆனால் மூத்தவரான நீங்கள் ஏன் நடிப்புலகில் முதலில் நுழையவில்லை?**

ப: அப்பாவுக்கு நான் தான் நடிகராக வேண்டும் என்பது ஆசை. சின்ன வயதில் இருந்தே 'நீ நடிக்கணும்டா' என்று என்னுடைய 12, 13 வயதிலேயே அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். ஆனால் எனக்கு அப்போதும் எப்போதும் நடிகராக இருப்பதில் நாட்டமிருக்கவில்லை. அதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. பின்னர் அப்பாவுக்கும் மனம் மாறிவிட்டது. நாங்கள் சினிமாவின் பக்கமே வரக்கூடாது என்றெண்ணி எங்களை பெங்களூருக்கு அனுப்பி விட்டார். அதன் பின்னர் சின்னவர் பிரபு நடிப்

> **எங்கள் தந்தை ஒருபோதும் விருதுகளுக்கு ஆசைப்பட்டவரல்லர். அவருக்குக் கிடைத்த ரசிகர்களின் ஆதரவு தான் எப்போதும் அவருக்கான உண்மையான விருது. அதனால் அப்பா இந்திய அரசாங்கம் தனக்கு உரிய மதிப்பளிக்கவில்லை என ஒருநாளும் குறைபட்டது கிடையாது. ஆனால் அப்படி அவருக்கு உரிய கௌரவம் வழங்கப்படாமைக்கு அரசியல் உள்நோக்கமும் ஒரு காரணமாக இருக்கும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மக்கள் காட்டிய பிரியத்துக்கு அளவேயில்லை

## இலங்கை வருவதற்காக பெரிய பாஸ்போட் சிவாஜி வைத்திருந்தார்



ஜிகணேசனின் மூத்தமகன்
ரத்தியேக நேர்காணல்

புலகுக்குள் நுழைந்து நல்லதொரு இடத்தைப் பிடித்தார். ஆனால் காலம் என்னையும் சினிமாவை நோக்கித் தள்ளியது. 1975 இல் நடிகராக அல்லாமல் தயாரிப்பாளராக நான் சினிமாவுக்குள் உத்தமன் என்ற படத்தின் மூலம் நுழைந்தேன். 'அண்ணன் ஒரு கோயில்' 'திரிசூலம்' போன்று வரிசையாகப் படத் தயாரிப்பில் இறங்கினேன்.

**கே: அப்படியானால் 'ஐ' படத்தில் எப்படி நடித்தீர்கள்?**

ப: இயக்குநர் ஷங்கர் ரஜினியை வைத்து சிவாஜி என்றொரு படத்தை எடுக்கும் போது , ஒருநாள் ரஜினி போன் பண்ணி என்னை ஸ்ரூடியோவுக்கு வரச்சொன்னார். நான் அங்கு போனபோது, 'ஷங்கர் உங்களைச் சந்திக்க விரும்புகிறார்' என்று ரஜினி சொன்னார். என்னைப் பார்த்த ஷங்கர் ' நீங்கள் இந்தப் படத்தில் வில்லனாக நடிக்க வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். சுமன் நடித்த வில்லன் பாத்திரத்துக்குத்தான் ஷங்கர் அப்போது என்னை அணுகியிருந்தார். ஆனால் எனக்கு அப்போதும் அதில் நடிக்க விருப்பமிருக்கவில்லை என்பதால், அந்த வாய்ப்பை மறுத்துவிட்டேன். அதன் பின்னர் சில வருடங்களுக்குப் பின் ஷங்கர் என் வீட்டுக்கு வந்தார். ஏதோ அழைப்பிதழ் தரத்தான் வந்திருக்கிறார் என நினைத்தேன். அப்போதுதான் ' ஐ படத்தில் நீங்கள் கட்டாயம் நடிக்க வேண்டும்' என்று கேட்டார். அவ்வளவு பெரிய இயக்குநர் என் வீடு தேடிவந்து இப்படிக் கேட்ட போது என்னால் மறுக்கமுடியவில்லை. அவரோடு பணிபுரிந்தது எனக்கு பல அனுபவங்களைக் கற்றுத் தந்தது. அதற்குப் பின் ஆர்.கே.பாலாஜியின் 'எல்கேஜி' சசிக்குமாரின் படம் என சிலவற்றில் அவர்களின் நட்புக்காக நடித்திருக்கிறேன். மற்றும்படி பெரும்பாலும் படங்களில் நடிப்பதைத் தவிர்த்தே வருகின்றேன். என்னுடைய இளைய மகன் நாயகனாக அறிமுகமானார். ஆனாலும் வெற்றிபெற முடியவில்லை. அதனால் சிலகாலம் ஒதுங்கியிருந்தார். இப்போது மீண்டும் குணச்சித்திர வேடங்களில் நடிக்கத் தொடங்கியிருக்கிறார். விரைவில் வெற்றிப்படத்தோடு அவர் வலம்வருவார்.

**கே: முனைவர் மருது மோகன் தன்னுடைய கலாநிதிப் பட்டத்துக்காக எழுதிய 'சிவாஜி கணேசன்' என்ற இந்தப் பெருநூலை 3 பாகங்களாக அச்சுருவில் கொண்டுவரும் எண்ணம் எப்படி உருவானது?**

முனைவர் பட்டத்துக்காக மருதுமோகன் எழுதிய இந்த ஆய்வு நூலில் , எங்கள் தந்தையைப் பற்றி பலருக்கும் தெரியாத அறியாத பல விடயங்கள் இடம்பெற்றிருந்தன. இந்த நூலை அப்படியே வைத்திருந்தால் இதில் உள்ள தகவல்களை பலரும் அறியாமலே போய்விடக்கூடும். நான் சிவாஜிகணே சன் ரசிகர் மன்றத் தலைவர் என்பதோடு , அவரின் புகழ் பரப்பும் குழுவில் நானும் ஒருவன். அந்த அடிப்படையில் இந்த ஆய்வை நூலாக்கி வெளியிட்டோம். சென்னையில் கடந்த டிசெம்பரில் நடந்த நூல் வெளியிட்டு விழாவில், இளையராஜாவும் பாரதிராஜாவும் இணைந்து இதனை வெளியிட்டு வைத்தார்கள். புத்தகத்தைப் படித்த ரஜினியும், கமலும் போன் செய்து ' எங்களுக்கே சிவாஜி அப்பாவைப் பற்றித் தெரியாத பல அரிய தகவல்கள் இந்த நூலில் இருக்கின்றன' என்று பாராட்டினார்கள். சென்னைப் புத்தகக் கண்காட்சியில் இந்த நூலின் பிரதிகள் அதிகளவில் விற்பனையாகி யிருந்தன. அந்தளவுக்கு மக்களிடையேயும் இந்த நூல் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

**கே: இந்த நூலை இலங்கையிலும் அறிமுகம் செய்யவேண்டுமென ஏன் நினைத்தீர்கள்?**

ப: இலங்கையில் மட்டுமென்றில்லை, சிவாஜிகணேசனைப் பற்றி அறிந்த, தமிழ் மக்கள் வாழும் இடங்களில் எல்லாம் இந்த நூலை வெளியிட வேண்டுமென விரும்பினோம். அதன் ஒரு அங்கமாகவே இலங்கையில் இந்த நூலை வெளியிட்டோம், இனிமேல் மலேசியா, மியான்மர், மொரிசியஸ், புலம்பெயர் நாடுகளிலெல்லாம் இந்த நூலை வெளியிடும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

பல நாடுகளில் இருந்தும் பலர் தங்கள் நாட்டில் இந்த நூலை வெளியிடுமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர். அவற்றைக் கருத்தில் கொண்டு, பொருத்தமான நேரத்தில் அந்த நாடுகளிலும் வெளியிட முயல்கிறோம்.

**கே: நடிப்புலகில் உச்சத்தில் இருந்த சிவாஜிகணேசன் எதற்காக தனிக்கட்சி ஆரம்பித்து அரசியலில் நுழைந்தார்? அரசியலில் தாக்குப்பிடிக்க முடியாதென அவருக்குத் தெரிந்திருக்கவில்லையா?**

ப: சிவாஜி கணேசன் ஒருபோதும் முதலமைச்சராக வர விரும்பி அரசியலில் இறங்கவில்லை. அவர் இன்னொரு கட்சிக்கு ஆதரவாகவே தனியாக கட்சி தொடங்கினார்.

**கே: அப்படியானால் ஏன் தனிக்கட்சி தொடங்கவேண்டும்? ஆதரவளிக்க நினைத்த கட்சியிலேயே இணைந்திருக்கலாமே?**

ப: அதுக்குப் பின்னால் பல காரணங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் வெளிப்படையாகச் சொல்லவும் முடியாது. அவர் என்ன நோக்கத்துக்காகக் கட்சி தொடங்கினாரோ அது முடிந்ததும், கட்சியை ஒரு வருடத்திலேயே கலைத்தும் விட்டார். தேர்தலில் தோற்றதை மட்டும் வைத்துக்கொண்டு சிவாஜி அரசியலில் தோற்றுவிட்டார் என்று கூறக்கூடாது. அரசியலில் அண்ணா, காமராஜர் போன்றோரே தேர்தலில் தோற்று இருக்கிறார்கள்.

**கே: ஆனால் அதே அண்ணாவும் , காமராஜரும் பின்னர் தேர்தலில் வென்றிருக்கிறார்கள். தொடர்ச்சியாக அரசியலில் நீடித்திருக்கிறார்கள். ஆனால் சிவாஜி அப்படியல்லவே?**

ப: அதற்குத்தான் சிவாஜியே சொல்லியிருக்கிறார், 'அரசியல் ஒரு தெய்வீகப்பசு. அதை வைத்து வளம்பெற வேண்டுமென நான் நினைக்கவில்லை. நான் அரசியலில் ஏமாற்றப்பட்டேன். ஒருமுறை அல்ல பலமுறை' என்று சொல்லியிருக்கிறார். ஏனெனில் அவர் அடிப்படையில் அரசியல்வாதியல்ல, அவர் ஒரு மகா நடிகர். அவரைப்போல் ஒரு நடிகர் தமிழ் சினிமாவில் இதுவரை இருந்ததுமில்லை, இனியும் வரப்போவதுமில்லை.

**கே: அப்படிப்பட்ட மகா கலைஞனுக்கு பிரான்ஸ் அரசாங்கம் கூட 'செவாலியே' விருது வழங்கிக் கௌரவித்தது, ஆனால் இந்திய மத்திய அரசாங்கம் அவருக்குரிய கௌரவத்தை வழங்கவில்லை. இது குறித்து உங்கள் கருத்து என்ன?**

ப: எங்கள் தந்தை ஒருபோதும் விருதுகளுக்கு ஆசைப்பட்டவரல்லர். அவருக்குக் கிடைத்த ரசிகர்களின் ஆதரவு தான் எப்போதும் அவருக்கான உண்மையான விருது. அதனால் அப்பா இந்திய அரசாங்கம் தனக்கு உரிய மதிப்பளிக்கவில்லை என ஒருநாளும் குறைபட்டது கிடையாது. ஆனால் அப்படி அவருக்கு உரிய கௌரவம் வழங்கப்படாமைக்கு அரசியல் உள்நோக்கமும் ஒரு காரணமாக இருக்கும்.

**கே: சினிமாவுலகில் கட்டுக்கோப்பு, அர்ப்பணிப்பு, கண்டிப்பு என்பவற்றைக் கொண்டவராக அறியப்பட்டவர். வீட்டிலும் அதேமாதிரிக் கண்டிப்போடுதான் இருப்பாரா?**

ப: அப்படியில்லை. அதற்கு நேரெதிராக அவர் இருப்பார். எங்களோடு ஜாலியாகப் பேசுவார், அன்பைப் பொழிவார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இரவு கட்டாயம் குடும்பத்தோடு தியேட்டருக்குச் சென்று படம் பார்ப்பதை அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். மற்றைய நாள்களில் அவருக்கு படப்பிடிப்பு இருக்கும். அதனால் காலையில் போனால் இரவுதான் வீட்டுக்கு வருவார். ஆனால் வெள்ளிக்கிழமை கட்டாயம் குடும்பத்துக்காக ஒதுக்கி எங்களுக்குத் தேவையான பாசத்தைக் அள்ளிக்கொட்டுவார். அவர் ஒரு நடிகர் என்பதைத் தாண்டி நல்லதொரு தந்தையாகவும் இருந்தார்.


**கே: மீண்டும் யாழ்ப்பாணம் வரும் எண்ணமுண்டா?**

ப: கட்டாயமாக. இந்த மக்களின் பிரியத்தைப் பார்த்தபோது அவர்களுக்கு என்ன கைமாறு செய்யப்போகிறோம் என்றுதான் யோசித்தேன். போரில் இருந்து இந்த ஊர் இன்னும் செழிப்பாக மீண்டெழும். அதைக் காண நானும் வந்துகொண்டேயிருப்பேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகராதி வல்லுநர் நடராஜா சிறிரஞ்சனுக்கு தமிழ்த்துறையின் காலப்பொருத்தமான விருது







யாழ்ப்பாணம் புளியங்கூடலைச் சேர்ந்த நடராஜா சிறிரஞ்சன், தற்போது இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளராகப் பணிபுரிந்து வருகின்றார். இவர் கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். குணநிதி, வணிக சொல்விளக்க அகராதி, யாழ்ப்பாணத் தமிழ் அகராதி, யாழ்ப்பாண வழக்குச் சொல் அகராதி- தொகுதி I ஆகிய நூல்களின் ஆசிரியர். குடும்பம் வாழுதல், சிறக்கச் சிறுகதைகள் ஆகிய நூல்களின் தொகுப்பாசிரியர். வணிகத்துறைப் பட்டதாரியாக இருந்தபோதிலும் அகராதியாக்கத்தின் மீது மிகுந்த தேடல் உடையவராக விளங்கினார். இவரது தேடலின் அறுவடைகளாக விளங்கியவை மூன்று அகராதிப் படைப்புகள் ஆகும். யாழ்ப்பாணத்துக்கும் அகராதியாக்க முயற்சிகளுக்கும் நீண்ட வரலாறு உண்டு. ஈழத்தவர்கள் ஒவ்வொருவரது அகராதிப் படைப்பாக்கங்களுக்கும் தனித்தனிச் சிறப்புண்டு. அந்த வரிசையில் நடராஜா சிறிரஞ்சன் மிகவும் சுவாரசியமான முறையில் யாழ்ப்பாணத் தமிழ் அகராதியைத் தொகுத்துள்ளார். இன்றைய பேச்சு வழக்கையும் எழுத்து வழக்கையும் விளக்குவதற்கு 'க்ரியாவின் தற்கால அகராதி' வெளிவந்தது.

எனினும் அது பூரணமாக யாழ்ப்பாண மக்களின் சொற்களை விளக்குவதாக இல்லை என்ற ஆதங்கம் தமிழறிஞரிடையே இருந்தது. யாழ்ப்பாணப் பிரதேச மக்களிடையே நிலவும் பேச்சு, எழுத்து, இழிசனர் வழக்கு என்பவற்றையெல்லாம் தேடித் தொகுத்து இந்த அகராதியை வழங்கியுள்ளார். இவரது யாழ்ப்பாணத் தமிழ் அகராதி இலங்கை அரசின் 2020 ஆம் ஆண்டுக்கான சிறந்த புலமைத்துவ மற்றும் ஆய்வு சார் நூலுக்கான சாகித்திய மண்டலப் பரிசையும் 2019ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு அரசின் 'சிறந்த அகராதி' என்ற விருதையும் பெற்றுள்ளது.

நடராஜா சிறிரஞ்சன் தொகுத்தளித்த அகராதிப் படைப்பாக்க முயற்சி காலத்தின் தேவையை நிறைவு செய்யும் அரியதொரு கருவூலம். இத்தகு சால்பமைந்த அகராதி வல்லுநரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை கௌரவிப்பது காலப்பொருத்தமான செயலே.



சு. மாதுளன்
தரம்- 2
யா/கல்வயல் சண்முகானந்த வித்தியாலயம்



K.அபர்ணன்,
தரம்-11A
யா/ காரைநகர் இந்துக் கல்லூரி




## மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555



எ.நர்த்தனா
தரம் 3
யா/இணுவில் சிவகாமி அறநெறிப்பாடசாலை



ச.அகப்பிரியன்
தரம் 6
மு/மல்லாவி மத்திய கல்லூரி



ச.சதுர்சன்
தரம்: 8
யா/மந்துவில் றோ.க.த.க பாடசாலை

# இந்திய உள்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதித் தேர்தலில் இந்தியாவைத் தன் பக்கம் வைத்துக்கொள்ள அது உதவும் என்றும் நம்புகிறார். சீன விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக மாறிய இந்தச்சிறிய தீவை இந்தியாவுடன் இணைக்கத் தயார் என்று கூறுவதன்மூலம் இந்தியாவின் பாதுகாப்புத் தொடர்பான அச்சங்களைப் போக்கலாம் என்றும் அவர் நம்புகின்றார்.

இதற்கு ஓர் உதாரணத்தைச் சொல்லலாம். நாய்கள் சண்டை போடும் பொழுது தோற்றுப்போன நாய் என்ன செய்யும் தெரியுமா? நான்கு கால்களையும் வானத்தை நோக்கி உயர்த்தியபடி தன் வயிற்றுப் பகுதியைக் காட்டியபடி மல்லாக்கக் கிடக்கும். அது ஒரு முழுச்சரணடைவு. நாயின் உறுப்புகளில் மிகப் பலவீனமானது அடி வயிற்றுப் பகுதி. அந்த மென்மையான அடிவயிற்று பகுதியை எதிரியிடம் முழுமையாக ஒப்படைத்து விட்டு 'நான் மோதலுக்கு தயார் இல்லை;எனது பலவீனத்தை நீ தாக்கலாம்' என்று சரணடைவது. ரணில் அந்தத்தற்காப்பு உத்தியை நினைவுபடுத்துகிறார். திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்களை இந்தியா பாவிப்பதற்கு அனுமதித்ததும் அவர்தான். இந்திய நிறுவனங்கள் இலங்கையில் எரிபொருளை விநியோகிப்பதற்கு அனுமதித்ததும் அவர்தான். இப்பொழுது சீன நிறுவனங்களுக்கும் அவர் அவ்வாறு அனுமதியை வழங்கியுள்ளார்.

அவர் டில்லியில் வைத்து பாலம் கட்டத் தயார் என்று கூறிய பின்னர் தயான் ஜெயதிலக போன்ற சிலரைத்தவிர பெரும்பாலான சிங்களக் கட்சிகள் அது தொடர்பாக பெரிய அளவில் எதிர்ப்பைக் காட்டவில்லை. ஏனெனில், எல்லாருக்குமே தெரியும். ரணில் ஒப்புக்கொண்ட பாலத்தை மனதால்தான் கட்ட முடியும் என்று. 63 நாயன்மார்களில் ஒருவராகிய பூசலார் கட்டிய மனக்கோவிலைப் போன்றதே அதுவும். அந்தப்பாலம் ஓர் அரசியல் பௌதிக யதார்த்தமாக மாறக்கூடிய பிராந்திய சூழல் இப்பொழுது இல்லை. கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையே நல்லுறவு உள்ளவரை அது சாத்தியமில்லை.

ஆனால், ஓர் அரசுத் தலைவர் என்ற அடிப்படையில் ரணில் சொன்னது இந்தியாவுக்கு ஒருபிடி. அதை எப்படி நடைமுறைப்படுத்தலாம் என்றுதான் இந்தியா சிந்திக்கும். இவ்வாறான ஒரு புவிசார் அரசியல் சூழலில்தான் இந்திய உள்துறை அமைச்சர் இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்தியுள்ளார். இந்தியாவின் மிகப்பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் அவ்வாறு கூறியதை வெறுமனே தேர்தல் நோக்கிலானது என்று எடுத்துக் கொள்வதா? அல்லது அதற்குள் ஏதும் இராஜதந்திர பரிபாஷைகள் உண்டு என்று எடுத்துக்கொள்வதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விஜயகாந்தின் படம் இருக்கோ?

சஞ்சீவி சிறுகதை

தொல்புரம் சி.கதிர்காமநாதன்

திரைப்படங்கள் மீது ஏற்பட்ட ஆர்வம் காரணமாகவே 'சீடி' கடைகளிலும் அதிகமாக நாட்டம் ஏற்படத் தொடங்கிவிட்டது. ஏன் திரைப் படங்கள் மீது ஆசை ஏற்பட்டதென நீங்கள் யாராவது கேட்டால், நான் என்ன சொல்ல முடியும்? என் இந்த அதீத ஆர்வம் சின்ன வயதிலிருந்தே படங்கள் மீது தொடங்கிவிட்டது. இராமநாதன் பெண்கள் கல்லூரியில் படிக்கும்போதே சின்ன வயதில் பிள்ளைகளைக் கொண்டு போய் தியேட்டரில் படங்கள் காட்டினார்கள்.

பார்த்த படங்களெல்லாம் பக்திப் படங்களே. எங்களைக் கொண்டு போய் 'கலரியில்' (திரைக்கும் எங்களுக்கும் அதிக இடைவெளி இல்லை) இருத்தி விடுவார்கள். சிவாஜி நடித்த சரஸ்வதி சபதம், யாழ். வெலிங்டன் தியேட்டரில் பார்த்தேன். 'கல்வியா, செல்வமா, வீரமா' என்று சிவாஜி பாடிய படி வருவது இப்போதும் கண்ணுக்குள் உள்ளது.

அன்று தொடங்கிய ஓட்டம் இன்று 63 வயது கடந்த பின்பும் 'சீடி'கடைவரை தேடி தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. தியேட்டர்கள் வளர்ச்சி அடைந்து, யாழ். நகரில் ராணி, ராஜா, ஸ்ரீதர், சாந்தி, வின்சர் லிடோ, றீகல், வெலிங்டன், ஹரன் போன்ற தியேட்டர்களில் படங்கள் அதிகமாக ஓடிக்கொண்டிருந்த காலம்.

றீகல் தியேட்டரில் ஆங்கிலப் படங்கள் மாத்திரம் ஓடும். யுத்த காலத்துக்குப்பின்பு தியேட்டர்கள் அழிவடைந்த பின்பு 'சீடி' கடைகள் உதயமாகின. எம்மைப் போன்றவர்களுக்கு 'சீடி'களே சினிமா பார்க்க உதவின. யாழில் 'சீடி' கடைகளையே என் கண்கள் தேடிக் கொண்டிருக்கும். எனது சகோதரர் இந்த விசயத்தில் புலி. எங்கு தான் கடைகளைத் தேடிப்பிடிக்கிறாரோ தெரியாது.

யாழில் அவர் போகாத 'சீடி' கடைகளே கிடையாது. ஒவ்வொரு இடமாகச் சொல்வார்.

'அங்கயொரு கடை இருக்கு. இங்கையொரு கடை இருக்கு. மருதனாமடச் சந்தையில ஒரு கடையிருக்கு'

எனக்கு ஆச்சர்யமாயிருக்கும். அவர் வீட்டின் அ...றையில் பெரும் பகுதி 'சீடி' களே ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். 'சீடி' கவரில் 'சீடி' யின் தொடர் இலக்கம், வாங்கிய திகதி, மாதம், ஆண்டு என்பன ஒழுங்காக எழுதப்பட்டிருக்கும்.

இப்போது யாழ்ப்பாணம் போவது மிகக் குறைவு. போனால் 'சீடி' கடைகளுக்கு போகாமல் வரமாட்டேன். யாழில் மிகப் பிரமாண்டமான 'சீடி' கடைகள் இல்லை. உள்ளே போய் 'சீடி' களை தேடுவது கஷ்டமான விசயம். கடைகளில் வேலை செய்பவர்களுக்கு படங்கள் பற்றி பெரிதாக விடயங்கள் தெரியாது. படங்கள் எடுக்கப் போனால், கையைக் காட்டி விட்டு பேசாமல் கைத்தொலைபேசியைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

நாம் தேடுகின்ற நல்ல ரசனையுடன் கூடிய ,கேள்விப்பட்ட படங்கள் கிடைக்கிறது மிகக் கடினமான காரியம். புதிய தமிழ்ப் படங்கள், ஆங்கிலப் படங்கள், தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்ட ஆங்கிலப் படங்கள், பிறமொழிப்படங்கள், புத்தம் புதிதாக பெருக்கெடுத்திருக்கும் சீரியல் தொடர் என்று எல்லா சீடிகளையும் ஒரேயிடத்தில வாங்கிற மாதிரி, கிட்டத்தட்ட சீடிகளுக்கான 'சுப்பர் மார்க்கெட்' இங்கையில்லை.

யாழ். இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்துக்குப் பின் பக்கம் ஒரு 'சீடி' கடை இருந்தது. மகன் ஏ.எல். படித்துக் கொண்டிருந்தபோது, என்னை அழைத்துச் சென்றிருக்கிறார். அந்த நேரத்தில் அந்தக்கடை எனக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. பள்ளிக்கூடப் பெடியன்கள் மொய்த்துக்கொண்டு நிற்பார்கள். படங்களைப் பார்க்கிறதுக்கு இப்ப இருக்கிற ஸ்மார்ட் போன் மாதிரியான அயிட்டங்கள் இல்லாத காலமது.

அதனால் கூட்டத்துக்கு குறைவில்லை. புதிய படங்களோடு என்ர மனுசி சொன்ன பழைய சிவாஜி படங்கள் வாங்கினேன். பாசமலர், பாகப் பிரிவினை, தீபம், உத்தமபுத்திரன், ராஜபார்ட் ரங்கதுரை போன்றவை வாங்கின படங்களில் அடக்கம் . எல்லாமே ஆயிரம் ரூபா சொச்சமாக வந்தது. அப்போது சீடி விலை ஐம்பது ரூபா மட்டுமே. காலங்கள் ஓடிக் கொண்டு போயின.

நானும் படங்களை வாங்கிக் குவித்துக் கொண்டே இருந்தேன். தமிழ்ப் படங்களோடு தமிழ் 'டப்' செய்யப்பட்ட ஆங்கிலப் படங்களும் வாங்குவது வழக்கம். சஞ்சிகையில், பத்திரிகையில், சினிமா பற்றிப் பேசும் சனல்கள் மூலம் அறிந்த என்ன மொழிப் படமானாலும் தேடி அலைந்து வாங்கிக் கொண்டு வந்து விடுவேன். எனது வீட்டு அலுமாரியில் சீடிக்களே நிறைந்து காணப்பட்டன. இந்த நிலையில் வழக்கம்பரைச் சந்தியில் கடை வைத்திருக்கும் தம்பியுடன் எனக்கு படச் சீடிக்களால் உறவு ஏற்பட்டது. அவர் பத்திரிகைகளில் கவிதைகள், துணுக்குகள் எழுதி வரும் காலத்தில் எனக்கு அறிமுகமானார்.

அவருக்கும் எனக்கும் அறிமுகம் ஏற்பட்ட போது படங்கள் கசெற்றில் பதிவு செய்யப்பட்டிருந்தன. 1995 இல் நான் கல்யாணம் முடிந்து வந்த நேரம், நான்கு கசெற் வாடகைக்கு எடுத்தால் நூறு ரூபா வாங்குவார்கள். அது இடம்பெயர்ந்து போய் திரும்பி ஊருக்கு வந்த நேரம். அப்போது மின்சாரம் ஊருக்கு வரவில்லை. அதனால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள், நண்பர்கள் என எல்லோரும் சேர்ந்து மண்ணெண்ணெய் வாங்கி, கசெற் எடுத்து ஜெனரேட்டரில் படம் பார்ப்பதுண்டு.

மாலை நேரம் படம் போட்டால் படம் முடிய நள்ளிரவு ஆகி விடும். இரவு ஊரடங்கு போட்டிருப்பார்கள். தெருவில் அறம்புறமாய் நாய்கள் குரைக்கத் தொடங்க, எங்களைத் தவிர மற்றவர்கள் படத்தை நிறுத்தி விட்டு தமது வீடுகளுக்கு ஓடி விடுவார்கள். அப்படிப்பட்ட காலத்தில் தான் இந்தச் சீடிக்கடைக்காரத் தம்பியிடம் போய் கசெற் வாங்குவது, படங்களைப் பற்றியும் ஊர்ப் புதினங்களையும் கதைப்பது வழக்கமாகிப் போனது.

பின்னர் திரைப்படங்கள் சீடிகளுக்குள் அடங்கத் தொடங்க, அவரின் கடை ரவுணுக்குச் செல்லும் பிரதான பாதையில் இருந்த இன்னொரு கடைக்கு மாறியது. இது அவருக்கு நல்லதாக அமைந்தது.

கடையில் அவர் மட்டுமே இருப்பார். காலையில் ஒன்பது மணிக்கு கடையைத் திறந்து விடுவார். காலையில் ஆட்கள் குறைவு. அவர் புதிய திரைப்படங்களைச் சீடிக்களில் பதிவு செய்து கொண்டிருப்பார்.

"டேய் உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன். என்ர குடும்பத்தை அழிச்ச உன்னைப் பழிவாங்காமல் இருக்கமாட்டேன்"

தெருவில் இப்படியான பட வசனங்கள் காதுபடக்கேட்கும்.

மாலையில் நாலு மணிக்குப் பிறகு ரியூசன் போகும் பொடியன்கள், என்னைப் போன்ற வயதான நபர்கள் அவரைச் சூழ்ந்து இருப்பார்கள். அவ்வளவுதான்.

நண்பரோ கொஞ்சம் உடம்பு வைச்ச மனுசர் தான். அவர் உடல் வாகு அப்படி. நானும் இப்போது மாலை நேரத்தில் அங்கு செல்வது வாடிக்கையானது. புதுப் படங்கள் இருக்கின்றனவா எனக் கண்கள் தேடும். அவரோ படங்களைப் பிரதி பண்ணிக் கொண்டிருப்பார். அவரின் பின்னால் பழைய, இடைக்காலப் பட சீடிக்கள் தொங்கிக் கொண்டிருந்தன. அவரின் இருக்கைக்கு முன்னால் இருந்த மேசையில் சமீபத்தில் வந்த புதிய படங்கள் பரவிக் கிடக்கும். தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்ட மலையாளம், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலப் படங்களோடு இன்ரர்நெற்றில் வெளியான சீரியல்களும் இருந்தன. பிறமொழிப் படங்கள் தமிழ் தலைப்புடன் கலக்கிக் கொண்டிருந்தன.

'முடிஞ்சா பிடிச்சுப் பார்'

'அதிரடி வீரன்'

'விடமாட்டன் உன்னை'

'ரகசிய உளவாளி'

'எனக்கு இன்னொருபேர் இருக்கு'

இதில் பாதிக்கு மேல் தெலுங்குப் படங்கள். யார் சொன்னது தமிழ் அழியுமெண்டு, தெலுங்குப் படங்கள் உள்ளவரை அழியாது.

"ஏன் இப்படி பேர் வைக்கிறார்கள் தம்பி?" என்று அவரைக் கேட்பேன்.

"இப்ப வாற பெடியன்கள் உப்பிடி பேர் இருந்தாத்தான் சீடி வாங்குவார்கள். சீடி கவரில துவக்கோ கத்தியோ வைச்சுக் கொண்டு நடிகர்மார் நிக்கவேணும். அப்பதான் வியாபாரம் நடக்கும்"

அவர் படங்கள் மாத்திரமல்ல பழைய, புதிய சினிமாப் படங்கள், பக்திப் பாடல்கள் அடித்துக் கொடுத்தார்.

"தம்பி சொல்லடா?"

"இதில் உள்ளதை அழிச்சுப் போட்டு இப்ப வந்த புதுப் பாட்டுகளை ஏத்திவிடுங்கோ"

"வாரிசு, துணிவு, டாக்டர், திருச்சிற்றம்பலம் ஏத்தி விடுங்கோ"

சில நிமிடங்களில் வேலை முடிந்துவிடும்.

"முந்தி பத்துப் பாட்டு அடிக்க எவ்வளவு கால நேரம் செல்லும். இப்ப..?"

ஒருவர் முடிய, இன்னொருவர் வந்துவிடுவார்.

"சொல்லுங்கோ தம்பி?"

"பக்திப்பாட்டு ஏத்தித் தருவியளே? இப்பத்த ரீமேக்ஸ் பக்திப் பாட்டுகள் இருந்தால் ஏத்தி விடுங்கோ. இடம் இருந்தால் இடைக்கால சோகப் பாட்டுகளை போடுங்கோ" அவர் ஏத்திக் குடுப்பார்.

"ஒரு றீமிக்ஸ் பக்திப் பாட்டு போடுங்கோ"

நான் கேட்டேன், போட்டார்.

"வேலவா வடிவேலவா, வேலனாக வந்து நின்ற வேலவா" புதிய துள்ளல் இசையில் குத்துப் பாடல் போல அது ஒலித்தது.

நான் சிரித்தேன்.

"என்ன சிரிச்சியள்?

"முந்தின பக்திப்பாட்டு இசை பக்தர் மட்டும் பக்தி கொண்டு இறைவனை நோக்கி ஆட்டம் போட்டுப் பாடுற மாதிரி இருக்கும். இப்ப பாட்டை கேட்டால் சாமியும் சேர்ந்து பக்தனோட ஆட்டம் போடுற மாதிரிக் கிடக்கு. சரி தம்பி எப்படி வியாபாரம் போகுது?"

"பெரிசா இல்லை. படங்களெல்லாம் போனிலேயே பார்க்கிற வசதி வந்திட்டுது. சீடி இப்ப நூறு ரூபா போகுது. அதால பெரிசா சீடி ஓட்டமில்லை. வாரிசு, துணிவு மாதிரி புதுப்படங்கள் வந்தால் ஓடும்"

"இப்ப வாற நடிகைமாரின் படங்கள்.......?"

"ஓடாது. வாறவங்கள் வந்து பார்த்திட்டு பேசாம போடுவினம். அதில நல்ல படங்கள் இருக்கும். வாங்கமாட்டினம் .சண்டைப் படம் கே.ஜி.எப். வந்து நல்ல ஓட்டம். இப்ப கே.ஜி.எப். 2 வந்து ஓடி முடியமுதலே, கே.ஜி.எப்.3 வந்திட்டோ என்று கேட்கிறார்கள். புஷ்பா படமும் அது மாதிரித்தான்"

அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, கடைக்கு நடுத்தர வயதுக்காரர் ஒருவர் வந்தார்.

"தம்பி சரத்குமார் படம் இருக்கோ?"

சுவரில் தொங்கிக் கொண்டிருந்த படங்களைக் காட்டி,

"அந்தப் பக்கம் பாருங்கோ" என்றார்.

"சரி தம்பி, விஜயகாந்த் நடிச்ச புதுப் படம் இருக்கோ?"

"இப்ப அவர் நடிக்கிறேலை. பழைய படங்கள் தான்இருக்கு"

அவர் கேட்ட படங்களை வாங்கிக் கொண்டு போய் விட்டார்

"சனங்கள் இப்பவும் விஜயகாந்த் நடிக்கிறார் எண்டு நினைச்சுக் கொண்டு இருக்கினம். இப்பவும் விஜயகாந்த், சரத்குமார் படங்களைத் தேடிப் பார்க்கிற சனங்கள் நிறைய இருக்கினம். அவைக்கெண்டு ரசிகர் கூட்டம் இப்பவும் இருக்கு"

எனக்கு முன்னால் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட் "காந்தாரா" கன்னடப்படம் இருந்தது.

"இது நல்லா ஓடின படமெல்லோ? என்ன மாதிரிப் போகுது? ஓட்டமோ?"

"நல்ல படம். ஆனால் வாறவையளுக்கு படத்தைப் பற்றித் தெரியாது. தெரிந்த நடிகர்மாரெல்லாம் விஜய், அஜித், ரஜினி, தனுஷ், சூர்யா, கார்த்தி மட்டும் தான். நான் கடைக்குவந்த ஒருவருக்கு காந்தாரா படத்தைப் பற்றிச் சொல்லப் பார்த்தன். சீடியைத் தூக்கிப் போட்டுட்டு போயிட்டான். பத்து சீடி அடிச்சனான். அப்படியே கிடக்கு.... செம்பி படமும் ஓட்டமில்லை"

அவர் பெருமூச்சு விட்டார். மீண்டும் சொல்லத் தொடங்கினார்.

"இதில பெரிசா லாபம் வாற மாதிரியில்லை. இந்தத் தொழிலில் பழக்கமாயிட்டன். தொழிலை விடுறதா? நடத்துறதா? எண்டு யோசனையாக் கிடக்கு. என்னோட படிச்ச முக்காவாசிப் பேர் வெளிநாட்டில. இப்ப யோசிக்கிறன், நானும் அவங்களோட போயிருக்கலாமெண்டு"

பொழுதுபடத் தொடங்கியது. நான் கிளம்பினேன். சில நாட்கள் கடைப் பக்கம் போக முடியவில்லை. அன்று சத்தியக்காட்டுச் சந்தைக்குப் போய் வீடு திரும்பும்போது, தனியார் மருத்துவமனையில் இருந்து, கடைத்தம்பி வெளியே வந்தார். முகம் காய்ஞ்சு போயிருந்தது.

"ஒரே இருமலாக்கிடக்கு.எனக்கு கொஞ்சம் முட்டுக்குணமும் இருக்கு. உவங்கள் மெயின் றோட்டை திருத்த வெளிக்கிட்டு, கடைசியில் காசில்லையெண்டு இருந்ததையும் பழுதாக்கிப் போட்டாங்கள். அந்த தூசு காத்தோட உள்ளுக்க போய், இப்பிடியாகிட்டுது"

"அப்பிடியே?"

"என்ரை கடைக்கட்டட முதலாளியும் வெளிநாட்டிலிருந்து ஊருக்கு வந்திட்டார். கடையைத் திருத்தப் போறாராம். அதால கடையை விட்டாச்சு"

எனக்கு அதிர்ச்சி.

"நானும் இருக்கத் தொடங்கி இருபது வருசமாகிட்டு. இவ்வளவு காலமும் இருக்க விட்டதுக்கு நன்றி சொல்லிப்போட்டு போக வேண்டியது தான்"

"வேற கடை பார்க்கவேணுமெல்லே?"

"இப்ப ஒரு முடிவும் எடுக்கேலாது"


அவர் போய் விட்டார்

அடுத்த சில நாட்கள் கடைப்பக்கம் போகும் போது, அதை இடிக்கும் சத்தம் பெரிதாகக் கேட்டது. வெளியே இருந்த மரக் கொப்பில் அந்த விளம்பரம் தொங்கிக் கொண்டிருந்தது.

'திரைப்படப் பாடல்கள், பழைய புதிய திரைப்படங்கள் இங்கு பெற்றுக் கொள்ளலாம்." *(யாவும் சிந்தனையே)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
06 ஒகஸ்ட் 2023



# 13 ஆம் திருத்தம்

## பற்றிய கதையாடலும் பொருளாதார நெருக்கடிகளை மறத்தலும்

குருமன்காட்டாள் வன்னிகா

பொருளாதார நெருக்கடியும் அதன் விளைவான உணவுப் பற்றாக்குறை, எரிபொருள் பற்றாக்குறை, சிகிச்சைகளுக்கான மருந்துப் பற்றாக்குறை, அவற்றின் பயங்கர விலையேற்றம், தொழில் இழப்புகள், வேலையின்மை முதலியனவும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இன, மத பேதங்களைக் கடந்த ஒற்றுமையுணர்வுடன் ஒருமித்து குரல் எழுப்பும் புதிய சமூக எழுச்சிச் சூழலை உருவாக்கியிருந்தன.

குறிப்பாக இலங்கை மக்கள் சமூகங்களின் கணிசமான உயர்வர்க்கமும் மத்தியதர வர்க்கமும் தாழ்மட்ட வருமானமுள்ள ஏழை வர்க்கமும் ஒரே வரிசையில் ஒரே நேரத்தில் வெயிலிலும் மழையிலும் பனியிலும் நின்றன. அங்கு வர்க்க பேதங்களும் தற்காலிகமாக மறைந்திருந்தன.

ஆனால் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிச் சென்றபின்னர், அதே பொதுஜன பெரமுவின் ஆதரவுடன் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானமை இலங்கையின் உள்நாட்டு சமூக, பொருளாதார, அரசியல் சூழலிலும் வெளிவிவகார அரங்கிலும் தாக்கமுள்ள மாற்றங்களை ஏற்படுத்தின.

சர்வதேச நாணய நிதியம், ஐரோப்பிய ஒன்றியம், உலக வங்கி, பாரிஸ் கழக அங்கத்துவ நாடுகள், பாரிஸ் கழக அங்கத்துவம் பெறாத நாடுகள் முதலிய எல்லாத் தரப்புகளும் இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைக்க விரும்பும் சூழல் பிரதானமானது.

அதேவேளை அந்தத்தரப்பினர் மறைமுகமாக இலங்கையின் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கும் மறைமுக ஆதரவையும் வழிகாட்டல்களையும் வழங்கினர்.

இந்தச் சூழல், இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து சிறிது சிறிதாக விடுபட்டு மேம்படும் "தோற்றப்பாட்டை" ஏற்படுத்தியுள்ளது.

இந்த மாற்றத்துக்கு ரணிலும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஏகபோக உரிமை கொண்டாடவும், அதனை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் முதலிட்டு வாக்குகளாக மாற்றவும் விரும்புகின்றனர்.

அதேவேளை பொருளாதார நெருக்கடி காரணமாக, சில இடதுசாரி முற்போக்கு சக்திகளின் ஆதரவுடன் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் உருவான ஒருமித்துக் குரல் கொடுக்கும் ஒற்றுமைச் சூழலை உடைப்பதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையும் பொதுஜன பெரமுனவின் தலைமையும் ஒன்றையொன்று முந்திக்கொண்டு போட்டி போட்டுக்கொண்டு செயற்படுகின்றன.

ஏனெனில் பொருளாதார ரீதியிலான வாழ்வாதாரம் மற்றும் தொழில் உரிமைகளுக்கான தொழிற்சங்க நடவடிக்கைகளும் போராட்டங்களும் மேற்படி இரு முதலாளியக் கட்சிகளின் வாக்கு வங்கிகளுக்கும் உதவமாட்டாதவை. அவை இடதுசாரி அணிகளையே பலப்படுத்தும். ஆகவே இனவாதச் சிந்தனைகளைத் தூண்டி, சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களைக் கூறு போட்டு . அவ்வின மக்களின் வாக்கு வங்கிகளைத் தனித்தனியே பேணவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையும் பொதுஜன பெரமுனவின் தலைமையும் விரும்புகின்றன.

அதற்கான உபாயங்களை மிக இலகுவாகவே உருவாக்கி, யாரும் சந்தேகிக்காமல் "அசல் எது? நகல் எது?" என்றுகூட ஏனையோர் புரிந்து கொள்ளாதபடி நகர்த்தி வருகிறார் ஜனாதிபதி ரணில்!

13 ஆம் திருத்தத்தின் அமுலாக்கல் தொடர்பிலும், காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கல் தொடர்பிலும் ஆலோசிக்கவும் கருத்து ஒருமைப்பாடு காணவும் எனக்கூறி சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுதல் முதலிய "அரங்கச் செயற்பாடுகள்" மூலம் நாட்டின் முக்கியமான இன, மத பிரிவினர் இடையேயும் அவர்களின் செய்தி ஊடகங்கள் மத்தியிலும் பிரிந்து நின்று விவாதிக்கும் முரண்பாடான - சூடான- களத்தைத் திறந்து விடுவதன் மூலமும், அறிவுபூர்வமாக ஒருமித்து மக்கள் பொருளாதார நெருக்கடிச் சூழலைத் தொடர்ந்து கண்காணித்து விளங்கிக்கொள்வதை தடுத்து, இன, மத அடிப்படையிலான "உணர்வுபூர்வ அடையாள அரசியல்களுக்கான" கோஷங்களை மக்கள் மத்தியில் தானாக உருவாகச் செய்து நாடெங்கும் சுழன்றடிக்க வைத்தலின் மூலமும், எந்தத் தேர்தலிலும் இன,மத பேதம் கடந்த முற்போக்கு ஐக்கியம் ஒன்றையும் நாட்டு மக்கள் இணைந்து நின்று பொருளாதாரத் தீர்வுகளைக் கேட்டுப் போராடுதல் முதலியவற்றையும் தடுத்துவிடலாம் என்பது ரணிலின் உபாயமாகும்.

அத்துடன் இந்தக் களம் 13 ஆவது திருத்தம் மற்றும் காணி, பொலிஸ் அதிகாரங்கள் முதலியன தொடர்பில் சிங்களக் கட்சிகள் கொண்டிருக்கும் உணர்வலைகளை இந்தியத் தரப்புக்குப் புரியவைக்கும் எனவும் ரணில் கருதக்கூடும். மாகாணங்களுக்கான அதிகாரங்கள் பற்றிய பேச்சையும் விவாதங்களையும் சட்ட, அரசியல் இழுபறிகளையும் முன் அரங்குக்கு இழுத்து, தமக்கு இப்பொழுது சாதகமற்றதாகவுள்ள மாகாணசபைத் தேர்தலையும் தவிர்க்க அவர் விரும்புகிறார் என்பதையும் தெளிவாக உணரமுடிகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org